ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | சுக்கில ஆண்டு தைத்திங்கள் 10–2–90 | இதழ் 3

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

... ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயில்



ஸ்ரீ காமதகன மூர்த்திக்குச் சிறப்புவழிபாடு 10-3-90 மாசிமகத்தன்று நடைபெற இருப்பதை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49	10-2-90	இதழ் 3

உட்பொருள்

எண் பக்கம்

1 இந்துப் பெருமக்களே! விழிமின்! எழுமின்! ... 113

2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 117

3 காவியத்தில் திருப்புமுனைகள் ... 123

4 போதமும் சித்தியும் ... 127

5 மஹாசிவராத்திரி ... 129

6 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 133

7 திருமுறைகளைப் போற்றுவோம் ... 139

8 எது வழிபாடு ... 144

9 வாயிலார், முனையடுவார் ... 147

10 செய்திகள் ... 153

11 எதிர்காலம் ... 156

12 பார்வையாளர் குறிப்பு 128, 152, 155

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

வேதாகமத்தின்
விதித்தமுத்தி தானன்றி
நீதானே யின்பமென்றல்
நீதியோ — பேதாய்
பெறுவானி யாநந்தம்
பேறென் றுரைத்த
தறியா திருந்தனை நீ யாம்.

— முத்திநிச்சயம் 7

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

திருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 3

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில - தை - 10—2—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி பாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

இந்துப் பெருமக்களே!
விழிமின்! எழுமின்!

மூன்றில் முதல் ஒன்று :

'இந்துமத வளர்ச்சிக்கு விழித்தெழுவீர்' என்று ஞானசம்பந்தம் கடந்த இதழில் தன் நேயர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. நமது தொன்மைச் சமயத்தின் முன்னேற்றம் தடைப்படுவதற்கு மூன்று காரணங்களை அதில் சுட்டியிருந்தோம். ஒன்று: இந்துக்களுக்குத் தம் சமயத்தில் ஊற்றமும், சமயவளர்ச்சியில் போதிய நாட்டமும் இல்லை. இரண்டு: மதம் மாறிச்செல்லும் இந்து சமய மக்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகள் இல்லை.

மூன்று: இந்துமத வளர்ச்சிக்கு ஆட்சியாளர்கள் தெரிந்தும், தெரியாமலும் செய்துவரும் இடையூறுகள் இவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, விரிவாக ஆராயலாம் என முன் இதழில் தெரிவித்திருந்தோம். முதல் தடையை இங்கே விரிவாக ஆராய்ந்து வாசகர்களுக்குக் காட்ட முயன்றுள்ளோம்.

இந்து மதமும், இந்திய ஒருமைப்பாடும் :

இந்திய தேசிய ஒருமைப்பாடுபற்றி நாம் பெரிதும் பேசுகின்றோம். 'இந்தியா ஒரே நாடு' என்கிறோம். 'இந்தியராக வாழ்வோம்: இந்தியப் பொருள்களையே வாங்குவோம்'. என உறுதிமொழிகளை வெளியிடுகின்றோம். நாவலந்திவு, பரதகண்டம், பாரதம் என்றெல்லாம் பண்டை இலக்கியங்களில் குறிக்கப்பட்டிருந்தாலும், முந்நூறு ஆண்டுகளுக்கு முன்வரை பாரதம் ஐம்பத்தாறு தேசங்களாகப் பிரிந்தேகிடந்தது; பகைத்தே வாழ்ந்தது. இந்திய வரலாற்று நூல்கள் இதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. வணிக நிமித்தம் வந்த ஆங்கிலேயர் நம்மை ஒருங்கிணைத்து இந்தியா என்ற பெயரில் ஒரு நாடாக உருவாக்கினர். 'இந்தியா ஒரு நாடு' என்பது இங்கே வாழும் மக்களின் மொழியால் அமைந்ததன்று; கலாசாரத்தாலும் அன்று; பண்புகளாலும் அன்று: காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வாழும் கோடானு கோடி மக்கள் மேற்கொண்டொழுகும் இந்து மதத்தால் அமைந்தது இந்த ஒருமைப்பாடு. இந்து மதத்திற்கு ஒரு தீங்கு வந்தால், அது மதத்திற்கு வந்த தீங்காக அமையாது, இந்திய ஒருமைப்பாட்டுக்கு வந்த தீங்காகவே முடியும் என்பதை எச்சரிக்க ஞானசம்பந்தம் கடமைப்பட்டிருக்கிறது.

பக்தி உண்டு ! பற்றுறுதி உண்டா ?

எந்த ஒருசமயத்தின் வளர்ச்சியும், வாழ்வும், அச்சமயத்தைச் சார்ந்த தனிமனிதர்களின் பக்தியிலும், பற்றுறுதியிலுமே அமைந்துள்ளன. இந்தியாவில் வாழும் ஏறத்தாழ எழுபது கோடி இந்துப் பெருமக்களுக்கும் அளப்பரிய பக்தி உண்டு; வழிபாட்டில் வல்லவர்கள்; சமய நியமங்களைத் தவறாது கடைப்பிடிப்பவர்கள்; மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று முறையாக நாடிச் சென்று வழிபடும் ஆர்வம் மிக்கவர்கள், சமயச் சடங்குகளையும், சமய விழாக்களையும் தவறாது கொண்டாடும் விருப்பம் மிக்கவர்கள். ஆனால், சமயவளர்ச்சி பற்றியோ, சமயத்திற்கு இழைக்கப்படும் தீங்கு பற்றியோ, சமய நிறுவனங்களின் செயற்பாடு பற்றியோ, அவற்றின் செயற்பாடுகளுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் பற்றியோ அவர்கள் கவலை கொள்பவர்களாக இல்லை. அளவற்ற

சகிப்புத்தன்மையில் ஊறிப்போன இந்துப் பெருமக்கள், தீமை இழைக்கப்படுவதைச் சில நேரங்களில் உணர்ந்தும், நமக்கெதற்கு இந்த வேலை; நாம் யார்; நம்மால் முடியுமா; என்ற தயக்கத்தில் சமய வீழ்ச்சிகளைக் கண்டு கொள்ளாது, கண்மூடி இருந்து விடுகின்றனர், இந்துப் பெருமக்கள் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியும் பக்திக் கனலை ஒருங்கிணைத்து, ஒரு இயக்கம் காண நாம் தவறினால், இந்துமதம் பேரழிவை நோக்கிச் செல்வதைத் தடுத்து நிறுத்த வல்லமையற்றவர்களாகி விடுவோம்.

யானை, ஆற்றல் இழக்கலாமா ?

இந்தியாவில் வாழும், இந்துக்கள் அல்லாத ஏனைய சிறுபான்மை மதத்தினர், மத அடிப்படையில் தங்களுக்குள் ஒருமித்த உணர்வோடு, ஒருங்கிணைந்து செயல்படுகிறார்களே, அது போல் ஒருங்கிணைந்து செயல்பட இந்துமக்கள் முயற்சிமேற்கொள்ளாதது ஏதனால்? திருக்கோயில்களை, திருமடங்களை, சமய மன்றங்களை, சமய வளர்ச்சி இயக்கங்களை மையப்படுத்தி ஏதேனும் ஒன்றில் தங்களை இணைத்துக் கொண்டு, தாய்ச் சமய வளர்ச்சிக்கு இயன்ற வாறு பணி புரியவும், அதற்கு ஒரு இடையூறு வருமானால் குரல் கொடுக்கவும், அன்புப் போராட்டம் நிகழ்த்தவும் இந்துக்களில் எத்தனை பேர் முனைந்துள்ளனர்? நமது பெரும்பான்மை பலத்தை ஒருங்கிணைத்து நாம் நிகழ்த்திக் காட்டிய மாபெரும் செயல்கள் ஏதேனும் உண்டா? ஆற்றல்மிக்க களிற்று யானை இங்கேசோம்பிக் கிடக்கிறது! அது எப்போது தன் முழுவலிமையை உணர்ந்து செயல்படப் போகிறது என்பது கேள்விக் குறியாகவே நிற்கிறது.

தற்சோதனைக்குச் சில வினாக்கள் :

அளப்பரிய பக்தியும், சமய ஈடுபாடும் கொண்ட இந்துப் பெருமக்களை நோக்கி ஞானசம்பந்தம் சில வினாக்களை முன்வைக்கிறது! நீங்களே உள்ளத்தில் விடை கூறிப்பாருங்கள்! சமயத் துறைக்கு நாம் உரிய கடமைகளைச் செய்தோம் என்று பெருமிதம் கொள்ள உங்களால் முடிகிறதா?

உங்கள் தாய்ச்சமய வளர்ச்சிக்காக, உங்கள் வருவாயில், ஒரு சிறு பகுதியையாவது மாதம் தோறும் வழங்கும் நியமம் உங்களிடம் உண்டா?

நீங்கள் போற்றும் சமயம் விதித்துள்ள நெறி முறைகளில் ஊற்றம் மிக்கவர்களாக, அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும் உண்மையான பாங்கு உங்களிடம் உண்டா?

திருக்கோயில், திருமடங்கள், சமய வளர்ச்சி அமைப்புக்கள் இவற்றில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் ஓர் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வருகிறீர்களா?

உங்கள் குழந்தைகளைத் தாய்ச் சமயத்தில் நாட்டம் கொண்டவர்களாக உருவாக்க முயற்சி மேற்கொண்டதுண்டா?

சமயம், சமய நிறுவனம், சமய விழாக்கள், சமயக்கோட்பாடுகள் பிறமதத்தவரால் பழித்தும், இழித்தும் உரைக்கப்பட்டபோது நீங்கள் என்ன செய்தீர்கள்?

உங்கள் கண் எதிரிலேயே அறச்சொத்துக்கள் களவாடப்பட்ட பொழுதும், கைமாறிப்போன போதும் நீங்கள் கண்டித்தது உண்டா?

நீங்கள் பூசும் திருநீறு; நீங்கள் அணியும் திருமண் அணிந்த, உங்கள் சமயத்தைச் சார்ந்த ஒரு தனி மனிதனின் நலம் மற்றும் திருமணில் நீங்கள் சமய உறவு உணர்வோடு பங்கேற்றதுண்டா?

விழிமின் ! எழுமின் !

ஏராளமான வினாக்கள் இன்னும் உள்ளன. தற்சோதனைக்காகச் சிலவற்றை அடையாளம் காட்டினோம். இந்துப்பெருமக்கள் இனியும் தூங்கினால், வாழ்க்கை விடியா இரவாக நீண்டு போகும். சமய உணர்வோடு, சமய வளர்ச்சியில் ஊற்றம் கொள்ளுங்கள். யாருக்கும் எதிராக ஒன்றுபடவேண்டாம். உங்கள் வளர்ச்சிக்காக ஒன்றுபடுங்கள்; உணர்வு கொள்ளுங்கள்; விழிமின்! எழுமின்; என்ற முன்னோர் நெறி போற்றுங்கள்; காலமுண்டாகவே கடவுள் மீது காதல் செய்து உய்யுங்கள்; இந்துமத ஆலமரத்தின் ஆற்றல் மிக்க விழுதாக விளங்க உறுதி பூணுங்கள். இந்துமதத்தைப் பின்பற்றுவோருக்கு இந்த அறவுரையே போதும்.

காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே

— மணிவாசகர்.

செயல்படுவோம் ! சீர்பெறுவோம் !

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில்
சீகாழியில் நடைபெற்ற
திருமுறை வேள்வியைத் தொடங்கிவைத்து

வழங்கியருளிய

ஆசியுரை

7—2—1990

“ தோடுடைய செவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
எடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே ”

— திருஞானசம்பந்தர்

இன்று திருவாதிரை நட்சத்திரம் காலை 7¼ மணிவரை இருக்கிறது. இரண்டு நட்சத்திரங்கள் 'திரு' என்னும் அடைமொழி சேர்த்து வழங்கப் பெறுகின்றன. ஒன்று. திருவாதிரை. மற்றொன்று திருவோணம். திருவாதிரை சிவபெருமானுக்கு உகந்த திருநாள். திருவோணம் திருமாலுக்கு உகந்ததிருநாள். திருவாதிரை என்பது நெருப்பு; நட்சத்திரங்களுள் பெரியது. அது செம்மேனியெம்மானாகிய சிவனுக்கு உகந்ததாயிற்று. திருவோணம் குளர்ச்சி; அது பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரந்தாமனுக்கு உகந்ததாயிற்று.

சிவபெருமானுக்கு உகந்த நாள் என்பதனாலும், முதல் திருமுறையின் முதல் திருப்பதிகம் தோன்றிய நாள் என்பதனாலும், திருஞானசம்பந்தர் அவதரித்தநாள் என்பதனாலும் பன்னிரண்டாம் திருமுறை தொடங்கியதும். பூர்த்தி பெற்றதுமான நாள் என்பதனாலும் இத்திருநாளில் திருமுறை வேள்வியை (முற்றோதல்) நிகழ்த்துவது பொருத்தமாகிறது. முதல் திருமுறை முற்றோதல் முதல் 'திருமுறையின் முதல் திருப்பதிகம் தோன்றிய சீகாழித் தலத்தில் தொடங்கப் பெறுகிறது.

உலகளாவிய நிலையிலும், இந்திய துணைக் கண்டத்தின் அளவிலும்கிரகங்களின் சேர்க்கையினால் எங்கும் பதட்டமும் அழிவும் நிகழ்ந்துவருகின்ற இக்காலத்தில் திருமுறை முற்றோதலை நிகழ்த்துவது இறையருளைப் பெற்றுத்துன்பங்களிலிருந்து மீள வாய்ப்பாகும் என்னும் கருத்தினால்தான் இம்முற்றோதல் ஸ்ரீகுருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் தொடங்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு திருவாதிரைத் திருநாளிலும் பாடல் பெற்ற தலங்களில் திருமுறை முற்றோதலை நிகழ்த்த ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. அவ்வகையில் அடுத்தமாதம் இரண்டாம் திருமுறை முற்றோதல்வைத்தீசுவரன் கோயிலிலும், அதற்கடுத்த மாதம் மூன்றாம் திருமுறை பூர்த்தி பெற்ற ஆச்சாள்புரத்திலும் நடைபெற உள்ளது. இங்ஙனம் தொடர்ந்து பன்னிரண்டு திருமுறைகளையும் பல தலங்களில் நிகழ்த்த முடிவு செய்யப்பெற்றுள்ளது.

இத்திருமுறை முற்றோதலைச் சிலர் இல்லத்தில் வைத்துக் கொள்ளலாம் என வேண்டினர். ஆனால் முதன் முதல் இறைவன் சந்நிதானத்தில் இறைவன் திருச்செவிக்கு விண்ணப்பம் செய்வதே பொருத்தமாகும் என எண்ணி இன்று ஸ்ரீ பிரமபுரீசுவரர்சந்நிதியில் தொடங்கப் பெற்றுள்ளது. இத்திருமுறை முற்றோதலில் ஆதீனக் கல்விநிலையங்களின் ஆசிரியர்களும்பேராசிரியர்களும் ஆர்வத்தோடு கலந்து கொள்ள முன்வந்துள்ளனர்.

திருமுறைப் பாசுரங்களை இங்ஙனம் ஓதுதலும் கேட்டலும் ‘எழில ஞான பூசை’ எனக் குறிக்கின்றார் அருள்நந்திசிவாசாரியார்,

“ஞானநூல் தனையோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருள்தனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை”

என்பது அவர் வாக்கு. இங்ஙனம் திருமுறைகளை ஓதுதலாகிய ஞானபூசையினைச் செய்ய முற்படுவதால் இதற்குத் திருமுறை வேள்வி எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு மனிதரும், ஒவ்வொரு நாளும் இறைவனுடைய திருப்புகழையும், திருப்பெயரையும் விடாது ஓதிக்கொண்டு வர வேண்டும் என்றும், அங்ஙனம் ஓதாநாட்கள் பயனற்றநாட்களாகும் என்றும் அருளாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் திருஞானசம்பந்தர்,

“துன்பம் நும்மைத் தொழாத நாட்கள்
இன்பம் நும்மை ஏத்தும் நாள்கள்”

என்று குறிக்கின்றார். அப்பர் சுவாமிகள்,

" பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே "

என்றருளுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

" இட்ட நும் அடி எத்து வார்இகழ்ந்
திட்ட நாள்,மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கருதேன் "

எனவரும் பாடல்களால் இறைவனைப் போற்றாதநாள் பயனற்ற நாள் என்று கூறுகின்றார். திருவள்ளுவர் பயனில்லாத சொற்களை விரும்பிப் பேசுவோனை 'மகன்' என்று சொல்லற்க. மக்களுக்குள்ளே பதர்' என்று சொல்க என்கிறார். எனவே, தோற்றத்தில் நெல்லைப் போல் தெரியினும் உள்ளீடு அற்றது பதர். அதுபோல, மனிதர்களில் கடவுள் சிந்தனை இல்லாதவர்கள் உள்ளீடு அற்றவர்கள் - இவர்கள் பதர் போன்றவர்கள் என்று கூறுகிறார்.

இங்ஙனம் இறைவனைப் போற்றுவதனால் என்ன பயன் என்பதற்குச் சுந்தரர் 'மற்றுப் பற்றெனக்கு இன்றி' - என்று தொடங்கும் பாடலில் விடைகூறுகிறார். 'நின் திருப்பாதமே மனம்பாவித்ததனால் இனிப் பிறவாத தன்மையாகிய பேரின்பமே வந்து எய்தினேன்' எனக் கூறுகிறார்.

" மற்றுப் பற்றெனக்கு இன்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந்து எய்தினேன் "

என்பது அவர்வாக்கு.

இனி, முதல் திருமுறையின்கண் அமைந்துள்ள பதிகங்களைக் குறித்துச் சிந்திக்கலாம். இதில் 136 பதிகங்கள் உள்ளன. இப்பதிகங்கள், 87 தலங்கள் குறித்துப் பாடப்பெற்றவை. இப்பதிகங்களில் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி,குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, யாழ்முரி என்னும் எட்டுப் பண்கள் அமைந்துள்ளன. யாழ்முரி மேகராகக்குறிஞ்சியிலேயே அடங்கும். பொதுவாகத் திருமுறைகளின் 24 பண்கள் உள்ளன. அவற்றில் 22பண்கள் ஞானசம்பந்தரால் பாடப்பெற்றவை என்பது இங்குக் குறிக்கத் தக்கது. இப்பண்களின் கட்டளைகள் எட்டு என்பர் உமாபதிசிவனார். கட்டளையும் கட்டளைப் பேதங்களுமாக 42 உள்ளன என்பது வெள்ளைவாரணனார் ஆய்வுக் குறிப்பு. கட்டளைப் பேதங்கள்

என்பவை யாப்பமைதியின் வேறுபாட்டினாலும், ஓசையின் வேறுபாட்டினாலும் ஏற்படுபவை. இப்பதிகங்களில் பதினொரு பதிகங்கள் அற்புதப் பதிகங்களாக அமைந்துள்ளன. இம்முதல் திருமுறையில் சைவ மறுமலர்ச்சிக்கு வித்தாயதும், ஆலவாய் அற்புதத்திற்குத் துணை நின்றதுமான "போகம் ஆர்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகமும், திருஞானசம்பந்தர் ஆலவாயிலிருந்து நேரே திருநள்ளாற்றிற்கு எழுந்தருளி நன்றி உணர்வோடு 'நம' தழுதழுக்கப்பாடிய, "பாடக மெல்லடிப் பாவையோடும்" என்று தொடங்கும் பதிகமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பதிகங்களின் அமைப்பில் முதலில் பாடியது தோடுடைய செவியன் என்று தொடங்கும் நட்டபாடை என்னும் பண்ணமைந்த பதிகமாகும். அடுத்து, திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குச் சென்று பாடிய பதிகம் "நறவநிறை வண்டறை தார்க்கொன்றை" என்று தொடங்கும் தக்கேசிப் பண்ணமைந்த பதிகமாகும். இதனைச் சேக்கிழார் ஞானசம்பந்தர் புராணத்தில் நுட்பமாகக் குறிக்கின்றார். இதனால் இரண்டாவதாகப் பாடிய பதிகம் "நறவ நிறைவண்டு" என்பதுடன் இரண்டாவது பண் தக்கேசி என்பதும் புலனாகிறது.

"பொங்கொளி மால்விடைமீது புகுந்தொளிர் பொற்றோணி
தங்கியிருந்த பெருந்திருவாழ்வு தலைப்பட்டே
இங்கெனை யாளுடையான் உமையோடும் இருந்தான் என்று
அங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத்தமுதுண்டார்"

என்பது அக்குறிப்புள்ள பாடல். இம்முதல் திருமுறையிலுள்ள "துஞ்ச வருவாரும்" எனத் தொடங்கும் திருவாலங்காட்டுத் திருப்பதிகம், பழம்பஞ்சுரப்பண் என்று சேக்கிழார் ஞானசம்பந்தர் புராணத்தில் குறிக்கின்றார்.

"துஞ்சவரு வார் என்றே எடுத்த ஓசைச்சுருதி
முறை வழுவாமல் தொடுத்த பாடல்
எஞ்சலிலா வகை முறையே பழைய னூரார்
இயம்புமொழி காத்ததனைச் சிறப்பித்து ஏத்தி
அஞ்சனமா வுரியுரித்தார் அருளாம் என்றே அருளும்
வகை திருக்கடைக்காப்பு அமையச் சாத்திப்
பஞ்சுரமாம் பழையதிறங் கிழமை கொள்ளப்
பாடினார் பாரெல்லாம் உய்ய வந்தார்"

என்பது சேக்கிழார் வாக்கு. ஆனால் இப்பதிகம் இன்று தக்கராகப் பண்ணில் சேர்க்கப்பட்டுள்ளது. மாற்றம் செய்ய வேண்டியது.

முதல் திருமுறையின் பதிகங்கள் அனைத்தையும் பொருளுணர்வோடு சிந்திப்பதற்கு இங்குப் போதிய அவகாசம் இன்மையினால்

'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் முதல் பாடலை மட்டும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளலாம். உனக்குப் பாலூட்டியது யார் என்று தந்தையார் கேட்ட பொழுது 'தோடுடைய செவியன்' என்று விடை பகர்ந்ததனால் அம்மையப்பரின் திருவுருவத்தை ஞான சம்பந்தர் நினைவு கூர்ந்தார். தோடு என்பது பெண்கள் அணியும் காதணி. குழை என்பது ஆண்கள் அணியும் காதணி. தோடுடைய செவியன் என்று இணைத்ததினால் இது அம்மையப்பரை ஒன்றாகவே நினைவு கூர்ந்ததாகிறது.

இப்பதிகத்தில் முதல் எழுத்துத் 'தோ' என்பதாகும் இதில் தகரத்தைக் கழித்தால் ஓகாரம் கிடைக்கும். பன்னிரண்டாம் திருமுறையின் கடைசி எழுத்து, 'ம்' என்று முடிகிறது இதனால் 'ஓம்' என்னும் பிரணவமே இவ்வளவு தழைத்துச் செழித்துப் பாசுரங்களாக மலர்ந்துள்ளது. ஆலம் வித்துப் பின்னே பெரிய ஆலமரத்திற்கு அடிப்படையாக விளங்குவது போல இப்பிரண வத்தைக் கொள்ளலாம்.

தோடுடைய செவியன் என்னும் இப்பாடல் இறைவனின் ஐந்தொழில்களை விளக்கிக் கூறுகிறது. விடையேறி என்பது, படைத் தலைக் குறிக்கும். எங்ஙனம் எனில், விடை என்பது தர்ம உருவ மாதலின் அது அறத்திற்கு ஆகி அறங்களில் சிறந்ததாகிய இல்லறத்திற்குப்போந்து, இல்லறத்தின் பயனாகிய மக்கட்பேற்றின் மகத்துவத்தைக் குறித்த வகையில் இது படைத்தலாயிற்று. 'தூவெண் மதிசூடி' என்பதனால் சந்திரனைக் காத்தவர் என்ற வகையில் காத்தலையும், சுடலைப்பொடி பூசி என்றதனால் அழித்தலை யும் உள்ளம்கவர்கள்வன் என்றதனால் மறைத்தலையும், அருள்செய்த என்பதனால் அருளலையும் குறித்தார். இங்ஙனம் இத்திருமுறைப் பாசுரங்களில் வரும் பாடல்களை நுண்மாண் நுழை புலத்தோடு கற்றுச் சிந்தித்துத் தெளிதல் சைவர் கடனாம்.

மேலும் முதல் திருமுறையில் அமைந்துள்ள முக்கிய குறிப்புக் கள் அமைந்த சில பாடல்களையேனும் இங்குக் குறிப்பிடுதல் பயனுடையதாகும்.

" வினையாததோர் பரிசில்வரு பசு பாச வேதனை ஒண்
தளையாயின தவிர அருள் தலைவன் "

என்ற திருமுதுகுன்றத்துப் பாடலில், அநாதி நித்தியப்பொருள். பசு, பாசம், இருவினை, மாயை, மற்றும் தலைவனாகிய பதி என்று குறிப்பிட்டுள்ளார்.

கற்றல், கேட்டல் உடையார், பெரியார், என்றும் அத்தகை யோர் இறைவனை வணங்குகின்றனர் என்றும் கூறுகிறார்.

திருவிழிமிழலையில் உள்ள மெய்மமொழி நான்மறையோர் களால் இறைவன் போற்றப்படுகிறான் என்று உடன்பாட்டில் கூறியவர், புகலியில் "பொய்ம்மொழியா மறையோர்களால் போற்றப்படுகிறான் என்று எதிர்மறை வகையால் மெய் பேசுவோரே இறைவழிபாட்டிற்குரியார் என்பதைப் புலப்படுத்துகிறார்.

"ஈறாய் முதல்ஒன்றாய் இருபெண்ஆண் குணம்மூன்றாய்
மாறுமறை நான்காய்வரு பூதம் அவைஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத் திசைதானாய்
வேறாய்உடன் ஆனானிடம் வீழிம் மிழலையே"

என்ற திருப்பாடலில் இறைவன் உயிர்களிடத்து ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து உதவும் தன்மையைக் குறித்துள்ளார். திருநின்றி யூர் அடிகள் திருப்பாதம் பணிவார், அச்சம் இலர், பாவம் இலர், கேடும் இலர், நித்தம் உறு நோயும் இலர், என்கிறார். கற்குடி மாமலைப் பாடலில், "துன்பமொடின்பமதெல்லாம் கடந்தவர்" கடவுள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

திருக்கழுமலப்பதிகத்தில் "புவிமுதலைம் பூதமாய் புலனைந்தாய் நிலன் ஐந்தாய் கரணம் நான்காய்" என்ற பாடலில் ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு என்பதைக் குறிப்பிடுகின்றார். இன்பக் காலத்து இறைவனை எண்ணுதமானிடர்கள், துன்பக்காலத்துத் தொழும் தன்மையை, "நுண்ணியான் மிகப்பெரியான் நோயுளார் வாயுளான்" என்ற திருச்செங்காட்டங்குடிப் பாடலால் தெளிவிக் கின்றார். இவையெல்லாம் முதல் திருமுறையில் உள்ளன. இவற்றை நாம் கற்றுத் தெளிந்து பின்பற்றவேண்டுவனவாம்.

இன்றைய முதல் திருமுறை முற்றோதலில், மாதோர் கூறனை, ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை, ஆதரித்து இசை கற்று வல்லார் சொலக் கேட்டு உவந்த சீகாழி நகர அன்பர்களும், அன்னையரும், ஆசிரியர்களும் எல்லா நலங்களும் பெற்று நீடுஇனிது வாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

காவியத்தில் திருப்புமுனைகள்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
தருமபுரம்.

தோற்றுவாய் :

மாதவியின் அரங்கேற்றத்திற்குக் கோவலன் செல்லாதிருந்தால், சிலப்பதிகாரக் காவியம் உருப்பெற்றிருக்காது. கைகேயி வரம் கேட்டிருக்காவிட்டால் இராமபிரான் வாழ்க்கை அயோத்தியிலேயே முடங்கிப் போயிருக்கும். சிவபெருமான் திருமணத்தில் தடுத்தாட் கொள்ளாதிருந்தால் பெரியபுராணமே உருப்பெற்றிருக்காது. சூதாட்டம் ஒன்று நடவாதிருந்தால், பாரதப்போருக்குத் தேவையே இருந்திருக்காது. உதயணகுமாரன், கொலை செய்யப் பெறாதிருந்தால், மணிமேகலை அறச்செல்வியாக உயர்ந்திருக்க வழியே இல்லை.

ஆணிவேர் :

திருப்புமுனை, காவியத்தின் ஓர் அங்கமன்று; அதுவே காவிய வளர்ச்சியின் ஆணிவேர். ஆழமாக ஆராய்ந்தால், நீரோட்டமாக நடையிட்டு வந்த கதை ஒன்று, காவியமாக உருப்பெற்றுத் தொடங்குவதே திருப்புமுனைக்குப் பின்னர்தான். இந்தத் திருப்புமுனையைக் கையாள்வதில்தான், கவிஞனின் திறமையே வெளிப்படுகின்றது. அழகிய, பெண் ஓவியம் ஒன்றற்குக் கண்திறப்பது போல், காவிய அழகுணர்ச்சியே, திருப்புமுனையில்தான் கருக்கொண்டு வளர்கிறது. தமிழ்க் கவிஞர்கள், காவியத் திருப்புமுனைகளைக் கையாள்வதில் மாபெரும் வெற்றி கண்டவர்கள். கதை ஓட்டத்தை மட்டும் நிகழ்த்தாமல், கண்ணுக்குப் புலப்படாக் காவிய நுட்பங்களையும், தாம் அமைத்த திருப்புமுனைகளால், இழைத்தமைத்த பெருமை அவர்களுக்கு உண்டு.

காவிய இலக்கணம் :

நாம், காவியங்களைப் படைத்த அளவிற்கு, அவற்றை ஆய்ந்து, இனங்கண்டு, காப்பியக் கொள்கைகளை வகுத்தவர்கள் அல்லர். ஒரு மொழியின் காவிய இலக்கணத்தை, அம்மொழியின் முதற்

காவியத் தொடங்கி வகுக்கத் தவறிய, தொன்மொழியாளர்களுள், தமிழரும் அடங்குவர். சிலப்பதிகாரத்தை ஆய்ந்து, நாம் காவிய இலக்கணம் படைக்கவில்லை. மணிமேகலை, நமக்கு மேல் வரிச்சட்டமாக ஒருபோதும் அமைந்ததில்லை. தமிழ்இலக்கியங்கள் எவை? தமிழ்மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எவை, என்ற வேறுபாட்டு உணர்ச்சியே தமிழ் ஆய்வாளர் பலரிடம் இல்லை. சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் தமிழ்க்காவியங்கள் தாம். ஐம்பெருங் காப்பியப் பட்டியலிலும் இவை இடம் பெறுகின்றன. ஆனால், இரண்டும் ஒன்று? சிலம்பு, கதைக் கருவாலும், காப்பிய உருவாலும் தமிழ்க்காவியம். சிந்தாமணி வடமொழி மூலக் கருவின் மேல், தமிழ்மொழியில் புனையப் பெற்ற காவியம். தமிழர் நாகரிகம், மற்றும் பண்பாட்டு ஆய்வுக்குச் சிலம்பே துணைசெய்ய வல்லது. சிந்தாமணி, காப்பியக் கட்டமைப்புக்கும், யாப்பியல் வளர்ச்சிக்கும் ஆய்வுப் பொருளாதல் கூடுமே தவிர, தமிழர் நாகரிகப் பண்பாட்டு, ஆய்விற்கு அதிலே, எந்த அளவிற்கு இடமுண்டு?

ஒரு பிழைபாடு :

தண்டியலங்காரமும், மாறன் அலங்காரமும், பாட்டியல் நூல்களும் வகுத்துரைத்த, காவிய இலக்கணங்கள், தமிழ்க் காவிய இலக்கணங்களாக உணரப் பெற்ற பிழைபாடு, நமது மெத்தனப் போக்கின் விளைவால் அமைந்தது. முதற்காவியமாகப் போற்றப் பெறும் சிலப்பதிகாரத்தை, மேல்வரிச் சட்டமாகக் கொண்டு, காவியத்திருப்புமுனைகள் பற்றி இதுவரை நாம் என்ன இலக்கணம் வகுத்தோம்? காவியக் கட்டமைப்பிற்காவது, அதனை முதலாகக் கொண்டோமா? சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு ஒரு வகை. சிந்தாமணி வேறு வகை, இராமாயணம் பிறிதோர் வகை, பெரியபுராணம் காவியம் தானா? என்று இன்னும் சிலர் கேட்கும் வகை, தமிழில்காணப்படும் மிகச்சிலவாய காவியங்களுக்கிடையே கூட, ஒருமித்த கட்டமைப்பு இல்லாமல் போனதற்கு இந்த, நம்மவர்களின், மேலாண்மையின்மையே காரணம்.

சிலம்பின் முதல் திருப்பம் :

இளங்கோவடிகள் கையாண்டுள்ள காவியத் திருப்பு முனைகள் வியப்பூட்ட வல்லன. தமிழில் எழுந்த முதற்காவியம் என்ற உணர்வில் இவ்வியப்பு இரட்டிப்பாகிறது. பூம்புகார்ச் செல்வக் குடும்பத்துக் கோவலன் கண்ணகியை மணந்ததோ, அவர்கள் மனையறம் படுத்தப்பட்டதோ, தாரும் மாலையும் மயங்க அவர்கள்

கூடிக்களித்ததோ காவியப் புனைவுக்கு இசைந்த கதைப் பகுதிகள் ஆகமாட்டா! மாதவி அரங்கேற்றம் கண்டு, அவள் கலையாற்றல் கண்டு, அவ்வீதியில் விலைபேசக் கண்டு 'மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு' என்றதும், வடு நீங்கு சிறப்பின் தன் மனை அகம் மறந்து மாலை வாங்கி மாதவி பின்னால் கோவலன் போகின்றானே அங்கேதான் சிலம்பின் முதல் திருப்பம் அமைகிறது. ஒரு குடும்ப வாழ்க்கை காவியமாக அரும்பத்தொடங்குகின்றது. ஒருகுடும்பப் பெண் பத்தினியாக உயரத் தொடங்குகின்றாள். ஒரு செல்வன் கலைஞனாகிறான்! ஒரு ஆடுமகள் குலமகளாக உயர்கிறாள். காவியம் பயில்வோர் கண்கள் அகலவிரிகின்றன அவர் நெஞ்சம் கண்ணகிக்காக இரக்கம் கொள்கிறது. கோவலனை ஏசுகின்றது. மாதவியைத் தூற்றத் துணிகிறது!

அடையாளம் காட்டுதல் :

இந்த ஒரு திருப்பத்தை உருவாக்கக் கவிஞன் எங்கே தொடங்குகின்றான்?

கோவலன் கண்ணகியைவிடுத்து மாதவிபால் பிரிந்துசேர்வது காவியத்தின் மூன்றுவது காதையில்தான்! ஆனால், இளங்கோ வடிகள், பின் நிகழப்போகும் திருப்பத்திற்கு முன்னதாக, முதற் காதையிலேயே அடையாளங்களைப் பதிவு செய்கிறார். திருமணத் தில் அமங்கலச் சொல்லிற்கு இடம் ஏது? இளங்கோவடிகள் அறியாதவரா? கோவலன் கண்ணகி இருமணம் காணவந்த பெண்கள் மணமக்களை வாழ்த்துகின்றார்கள்! எப்படி?

"காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக"

'இவனொடு இணைந்து வாழ்க!' என்பதே மங்கல வழக்கு! 'கை கோர்த்து வாழ்க' என்பதே வாழ்த்தும் முறை! 'நலம் சிறக்க வாழ்க' என்பதே உலகியல்! இளங்கோவடிகளோ, 'பிரியாமல்' என்றும் 'நெகிழாமல்' என்றும் 'தீதறுக' என்றும் மங்கல மங்கையர் வாக்காக, எதிர்மறை வாழ்த்துக்கூறச் செய்கிறார். நுட்ப உணர்வு படைத்தார்க்கு, பின் வரும் காவியத்திருப்பத் திற்கு அடையாளம் காட்டும் கவித்திறம், இங்கே வெளிபடக் காண்கின்றோம்.

கவிஞனுக்கு நேர்ந்த சிக்கல் :

கோவலன் பிரிவு திட்டமிடப்பட்ட ஒன்றன்று; கண்ணகியின் பிழை ஏதும் அவன் பிரிவுக்குக் காரணமன்று. கோவலனே காவியத் தலைவியின் மதிப்பிற்குரிய கணவன்! மாதவியாவது

மையல் செய்து கோவலனைப் பிரித்தாளா? இருந்தும், பிரிவு நேர்ந்து காப்பியத் திருப்பம் நிகழ்ந்து விடுகிறது. கவிஞனுக்கு மிகச் சிக்கலான இடம் இது. திருப்பத்தைப் பதிவு செய்வது மட்டும் அவன் கடமை அன்று. அதற்குக் காரணமானவரை இனங்காட்டவேண்டும். வினாவுகளுக்கு விளக்கம் கூறவேண்டும். இளங்கோவடிகள் என்ன செய்கிறார்?

'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்ற காவியத்தின் முப்பெரும் பாவிகங்களுள் ஒன்றை, இத்திருப்பத்திற்குக் காரணமாகக் கூறாது விடுக்கிறார்.

மாதவி குற்றமற்றவள் என்பதனை விளக்க அவள் இல்லத்தை 'மணமனை' என்ற சொல்லால் குறித்துக்காக்கிறார்.

கோவலன் வெறுத்துப் பிரிவதற்குக் காரணமான எந்தக் குறையும் கண்ணகிபால் இல்லை என்பதை உறுதி செய்ய 'வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம்' என்று கோடிட்டுக் காட்டுகின்றார்.

கோவலனையும் குறைசொல்ல விரும்பாதவராய் 'வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் துறந்து' என்னாது 'மறந்து' என்ற சொல் பெய்துகாக்கிறார்.

கவிஞனின் பண்பாடு :

காவியப் போக்கில் நிகழ்ந்த இந்த முதல் திருப்பு முனைக்குக் காரணம் தேடவோ, கற்பிக்கவோ, சுட்டவோ இளங்கோவடிகள் விரும்பவில்லை; கானல்வரி நிறைவில் கோவலன் பிரிவுக்கு ஊழைக் காரணம் காட்டும் இளங்கோவடிகள், இங்கே காரணம் கூறாமை ஒரு பண்பாடு கருதி என்பது நுண்ணுணர்வினோர்க்குப் புலனாகவே செய்யும். நியமிப்பார் இல்லாது, ஆடவர் சமுதாயம் மேற்கொண்டு ஒழுகிய காம வாழ்க்கைக்குப் பூம்புகார் இடந்தந்து நின்ற அவலம் அறிந்த கவிஞர், அதனைச் சுட்டிக் காட்டிச் சோழர் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க விழைந்தாரல்லர். பாண்டியனையும், சேரனையும் பெயர் சுட்டிப் பேசும் கவிஞர், சோழன் இன்னார் எனக் குறியாதது இப்பண்பாடு கருதியதாகவே தோன்றுகின்றது.

காவியத்தில், தம் போக்கில் அமைந்த ஒரு திருப்பத்தைப் படைப்பதில் கவிஞர் காட்டும் எச்சரிக்கை உணர்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

(தொடரும்)

கட்டுரை எண். 25.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞான போதத்தின் இரண்டாம் நூற்பா, இனி, சிந்தனைக்குரியது ஆகிறது. அமைப்புநிலையில் இந்நூற்பா பாசஉண்மைக்குப் பிரமாணம் கூறுகிறது.

சென்ற நூற்பாவினுல் பதி உண்மை நிறுவப் பெற்றது. பதி என்னும் நிமித்த காரணன் உளனுதற்கு முதல்துணைக் காரணங்களும் உளவாதல் வேண்டும் ஆதலின் அவ்வகையில் முதல்துணைக் காரணங்களை விளக்குமுகத்தான் பாசஉண்மை நிறுவவேண்டுவது பொருத்தமாகிறது. நூற்பா :

" அவையே தானே ஆய் இருவினையின்
போக்குவரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கு மன்றே "

என்பதாகும். இந்நூற்பாவால், இறைவனின் இலக்கணமும் அவன் இவ்வுலகை எவ்வண்ணம் படைக்கிருன் என்பதும் அவற்றின் அடிப்படையில் பாச உண்மையும் கூறப்படுகின்றன.

இறைவனின் இலக்கணம் :

உயிர்களோடு இறைவன் ஒன்ருய் வேருய் உடனுய் இருந்தருளுகின்ருன். அவையே ஆய், தானே ஆய், அவையே தானே ஆய் எனப் பிரித்துக் கூட்டி இந்நூற்பாவின் பொருள் காணுதல் வேண்டும். உடலில் உயிர்போலக் கலப்பினுல் ஒன்ருய் இருக்கின்ருன்; கண்ணொளியும் கதிரவன் ஒளியும் போலப் பொருள் தன்மையால் வேருய் இருக்கின்ருன்; கண்ணொளியும் உயிர் அறிவும் போலத் தன்மையால் உடனுய் இருக்கின்ருன் என முனிவர் விளக்குவர்.

இறைவன் இவ்வுலகைப் படைக்கும் நிலை :

தனது ஆணை என்னும் சிற்சத்தியைத் துணையாகக் கொண்டு மாயை என்னும் முதற் காரணத்தை வைத்து இவ்வுலகைப்

படைக்கின்றான். குலாலனாக இறைவனும், சக்கரமாகச் சிற்சத்தியும் மண்ணாக மாயையும் இலங்குகின்றன என ஒப்புமை காணலாம்.

பாச உண்மையை விளக்கும் முறைமை :

இவ்வண்ணம் இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து, தான் நிமித்த காரணனாக விளங்கி, சிற்சத்தியையும் மாயையும் கொண்டு, படைக்கின்ற தொழிலை ஏன் செய்கின்றான் என்னும் கேள்விக்கு விடை காண முற்படும் போதுதான் பாச உண்மை நிறுவப் பெறுகிறது. உயிர்கள் செய்துள்ள நல்வினை, தீவினை என்னும் இருவினைகளை அவ் உயிர்கள் அனுபவித்துத் தீர்த்தல் பொருட்டுத்தான் இறைவன் இச்செயல்களைச் செய்கின்றான் என ஆசிரியர் இந்நூற்பாவில் விளக்குகின்றார். இதனை 'இருவினையின் போக்குவரவு புரிய" என்னும் தொடரில் கூறுகின்றார். 'போக்கு வரவு புரிய' என்பது, உயிர்கள் தாம் செய்துள்ள வினைகளின் பொருட்டு இறத்தலையும், பிறத்தலையும் மேற்கொள்ள இறைவன் செய்கின்றான் என்னும் பொருளை உடையது.

இங்ஙனம் இறைவன் உயிர்களின் ஈடேற்றம் குறித்து ஒன்றாய் வேறாய் உடனாய் இருந்து சிற்சத்தியைத் துணை எனக் கொண்டு செயல் செய்வது தடத்தஇலக்கணம் ஆகும். இது பொது இயல்பு. உண்மை இயல்பாகிய சொரூப இலட்சணம் சிவஞானபோதம் ஆறும் நூற்பாவால் விளக்கப் பெறுகிறது.

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

திருக்கடவூர்

இன்று திருக்கடவூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ஐம்பது அன்பர்களுடன்வந்து வழிபாடு செய்யத் திருவருள் கூட்டியது. தருமபுரம் திருப்பெருந்திரு மகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சியின்கீழ் இயங்கும் இத்திருக்கோயில் பணி யாளர்கள் மிக்க உபசாரத்துடன் வழிபாடு செய்துவைத்தனர். திருக்கோயில் தூய்மையாக இருப்பது ஆதீனத்தின் சிறப்பு

(ஒ-ம்) சுந்தர சுவாமிகள்,

20—6—89 கௌமார மடாலயம், கோவை-6.

மஹாசிவராத்திரி

சிவஸ்ரீ. A. V: சுவாமிநாத சிவாசாரியார்
தலைமையாசிரியர், வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

" ப்ரபஞ்ச ஸ்ருஷ்ட்யுன் முக லாஸ்காயை
ஸமஸ்த ஸம்ஹாரக தாண்டவாய ।
ஜகஜ்ஜனன்யை ஜகதேக பித்ரே
நமச்சிவாய ச நமச்சிவாய ॥ "

கருணைக் கடலான சிவபெருமான் ஆன்மாக்கள் அஞ்ஞானம் நீங்கிப் பரஞானமாகிய சிவஞானம் பெற்றுய்ய, சிவபூஜையே உயர்ந்ததென ஆகமங்கள் புராணங்கள் அடியார்களின் சரித்திரங்கள் இவைகளின் வாயிலாக உணர்த்தியருளியிருக்கிறார்.

பரார்த்த பூஜையான ஆலய வழிபாட்டிலே செய்யப்படுகின்ற நித்யோத்ஸவாதிகள், மாஸபூஜாதிகள் இவைகளெல்லாம், ஆன்மார்த்த பூஜையில் இடம்பெறுவது அரிது. ஆனால் வருடத்தில் ஒரு நாள் வருகின்ற "மஹாசிவராத்திரி" வைபவமோ ஆன்மார்த்தம், பரார்த்தம் இரண்டிலுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொண்டாடப்படுகிறது.

சிவபெருமானுடைய வழிபாடுகளிலேயே மிக உயர்ந்ததும் பூலோக வாழ்க்கைக்குத் தேவையான சௌபாக்யங்களைத் தருவதோடு, மேலான சிவகதியையும் அளிப்பது சிவராத்திரி விரதம் தான்.

' சிவராத்ரி வ்ரதம் புண்யம் ஸர்வ பாப ப்ரணாசனம் ।
ராஜ ராஷ்ட்ராபிவ்ருத்யர்த்தம் சிவஞானப்ரதாயகம் ॥ "

(காரணாகமம்)

இதன் பொருள் :- சிவராத்திரி விரதமானது மிகவும் புண்ணியமானதும் எல்லாபாபங்களையும் போக்குவதும், அரசு குடி இவைகளை வளரச் செய்வதும் சிவஞானத்தைக் கொடுப்பதும் ஆகும்.

இதனால் மேலான இந்தச் சிவராத்திரியை அனைத்துசிவாலயங்களிலும் கொண்டாடுவதோடு, எல்லோரும் விரதம் இருந்து சிவபூஜை செய்து வழிபாடு செய்ய வேண்டிய தினமாகும்.

மாசி மாதத்தில் கிருஷ்ணபக்ஷ சதுர்தசி திதி கூடிய சுபதினத்தில் மஹா சிவராத்திரியானது அனுஷ்டிக்கப்படவேண்டும். பகலில் திரயோதசியும் இரவில் சதுர்த்தசியும் கூடிய சிவராத்திரியானது மிகவிசேஷமாகும். ஏனென்றால் திரயோதசிசக்தியாகவும், சதுர்த்தசி சிவனாகவும் இருப்பதால் இதை 'சிவசக்தி சம்மேளன சிவராத்ரி' எனக் கூறுவார்கள். ப்ரதோஷம் கூடுவதாலும் மிக விசேஷமாகும்.

சிவராத்திரி அந்தத்தில் அமாவாசை வந்து விட்டால் அது தோஷமாகும். இதற்கு அஸ்த்ர மந்திரங்களை ஆயிரம் முறை ஜபித்து ஆயிரம் முறை ஹோமம் செய்து சாந்தி செய்யவேண்டும். ஆனால் உத்திராடம், திருவோணம், அவிட்டம் இந்த நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்று அன்றைய தினம் கூடியிருந்தால் அத்தோஷம் இல்லை. சாந்தி ஹோமமும் செய்ய வேண்டியதில்லை.

மாசி மாதத்தில் இரண்டு கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி வந்தால் (இரண்டு சிவராத்திரி) முதலில் வருகின்ற திதியிலேயே சிவராத்ரி அனுஷ்டிக்க வேண்டும்.

" திதித்வயேது ஸம்ப்ராப்தே மாஸாதௌ ப்ரதமேஹனி
மாஸாந்தேது த்ரயோதஸ்யாம் சதுர்தஸ்யாயுதம்து வா I
பூர்வேது கதிதம் ஸ்ரேஷ்டம் அந்தம் மத்யமமுச்யதே II "

(சிவராத்ரி பூஜாபடலம் - காரணாகமம்)

இதன் பொருள் :- இரண்டு திதிகள் ஒருமாதத்தில் சம்பவித்தால் முதல் திதியில் செய்வதே நலம். இரண்டாவது திதியில் செய்வது மத்யமம்.

விரதம் முடித்து பாரணை செய்யும் போது சதுர்த்தசி இருப்பதே நலம். மேலும் சிவராத்திரியன்று சோமவாரம் (திங்கட்கிழமை) கூடியிருந்தால் மூன்று கோடி சிவராத்திரிக்குச் சமம் என்பதைக் கீழ்காணும் சுலோகம் மூலம் அறியலாம்.

" தத்தினே ஸோமவாரம் ஸ்யாத் த்ரிகோடி சிவராத்ரிகம் "

இச்சிவராத்திரி பூஜையை க்ருதயுகத்தில் விநாயகரும், த்ரேதா யுகத்தில் ஸ்கந்தரும், துவாபர யுகத்தில் பிரமனும் விசேஷமாகச் செய்து அருள்பெற்றனர் என்றும், கலியுகத்தில் மஹாவிஷ்ணு பூஜித்துப் பயன் பெறுகிறார் என்றும் ஆகமம் கூறுகின்றது.

வேடன் ஒருவன் புலி துரத்தியதற்குப் பயந்து காட்டில் மரம் ஒன்றின் மீது ஏறி இரவுப் பொழுதைக் கழித்தான். தூங்கினால் மரத்திலிருந்து விழ நேரிடும் என அஞ்சி மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே போட்டுக் கொண்டே இரவுப் பொழுதைக் கழித்தான். விடிந்ததும் சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்து மோக்ஷமும் அருளினார். ஏனென்றால் அவன் கண் விழித்த இரவு சிவராத்திரியாகும். அவன் ஏறியிருந்த மரம் வில்வ மரம். அதன் இலைகளைப் பறித்துக் கீழேபோட்ட போது அம்மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மீது அர்ச்சனை செய்வது போலவிழுந்தன. அறியாமலேயே இரவு முழுவதும் சிவபூஜை செய்திருக்கிறான். இதனாலேயே சிவபெருமான் அவனுக்குக் காட்சி கொடுத்து மோக்ஷமும் அருளினார்.

இதனால் சிவராத்ரி தினத்தன்று இரவு நான்கு யாமங்களிலும் ஆன்மார்த்த பூஜை செய்பவர்கள் அதனைச் செய்தும், மற்றவர்கள் சிவாலயத்திற்குச் சென்று இரவு முழுவதும் நான்கு யாமத்திலும் வழிபட்டுக் கண் விழித்துச் சிவசிந்தனையோடு இருக்க வேண்டியது அவசியம்.

ஆலயங்களில் இரவு நான்கு யாமங்களிலும் ஒவ்வொரு கால பூஜையைச் சிவபெருமானுக்கு விசேஷமாகச் செய்ய வேண்டும்.

முதற்கால பூஜை :

நூற்றெட்டுக் கலசாபிஷேகம், பஞ்சகவ்யம் இவைகளினாலே விசேஷமாக அபிஷேகம் செய்யவேண்டும். சிவப்பு வஸ்திரம்சாத்தி, பச்சைக்கற்பூரம் கலந்த சந்தனம் பூசி வில்வபத்திரங்களினாலே அர்ச்சித்துச் சந்தனத் துகள்களினாலே தூபம் காட்டி, சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து ஷோடசோபசார தீபங்கள் காட்டிப் பூசிக்க வேண்டும்.

இரண்டாம் கால பூஜை :

எண்பத்தொரு கலசங்கள், பஞ்சாமிர்தம் இவைகளினாலே விசேஷ அபிஷேகம். பீதாம்பரம் சாத்தி, கஸ்தூரி கலந்த சந்தனம் பூசி, முல்லை மலர்களினாலே அர்ச்சித்துக் குங்குலிய தூபம் காட்டி, பாலன்னம் நிவேதனம் செய்து, ஏழு அடுக்குத் தீபம் காட்டிப் பூஜிக்க வேண்டும்.

மூன்றாம் கால பூஜை :

நாற்பத்தொன்பது கலசங்கள், பழச்சாறு இவைகளினாலே விசேஷ அபிஷேகம், வெள்ளைவஸ்திரம்சாத்தி, கோரோசனை கலந்த

சந்தனம் பூசி, சிவகரந்தை, கடம்ப புஷ்பம் இவைகளினாலே அர்ச்சித்து, சம்பா அன்னம் நிவேதனம்செய்து, அகில் தூபம் காட்டி ஐந்து அடுக்குத் தீபம் காட்டி இவைகளினாலே பூஜிக்க வேண்டும்.

நான்காவது கால பூஜை :

இருபத்தைந்து கலசங்கள், சந்தனம் பன்னீர் இவைகளினாலே விசேஷ அபிஷேகம் செய்து, பச்சை வஸ்திரம் சாத்தி, பன்னீர் ஜவ்வாது இவைகள் கலந்த சந்தனம் பூசி, நொச்சி பத்திரங்களினாலே அர்ச்சித்து, சாம்பிராணி தூபம் காட்டி, சுத்தான்னம் நிவேதித்து, பஞ்சோபசார தீபங்கள் காட்டிப் பூஜிக்கவேண்டும்,

ஒவ்வொரு காலமும் முதலில் விநாயகரை பூஜித்து, முடிவில் சண்டேசுவரரைப் பூஜிக்க வேண்டும். துவாரபூஜை, அக்னிகார்யம் இவைகளை விலக்கவேண்டும். ஒவ்வொரு காலமும் சிவபெருமானுக்கு அஷ்டபுஷ்பார்ச்சனை செய்யவேண்டும். ஆவரணபூஜைகள் செய்யக் கூடாது.

நான்கு கால பூஜை முடிந்தவுடன் அர்த்தயாம பூஜையை சூட்சும பூஜையாகவே செய்தால் போதும்.

" கேவலம் அர்த்தயாமார்த்தம் அஷ்ட புஷ்பம் ஸமர்ச்சயேத் "

இதன் பொருள் :- அர்த்தயாம பூஜைக்காக அஷ்டபுஷ்பார்ச்சனை செய்து தூப தீப நைவேத்யங்கள் செய்தால் மட்டும் போதும்.

இவ்வாறு மேலான இந்த சிவராத்திரியில் சிவபெருமானைத் தத்தமது சக்திக்குவந்தவாறு அர்ச்சித்து இம்மை மறுமைப் பயனடைந்து சிவஸாயுச்யம் பெற்றுய்வோமாக.

" லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து "

சுபமஸ்து

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

8. பிரேன்ஸிஸ்பேகன்

(Francis Bacon)

(கி. பி. 1561-1626)

(மலர் 48, இதழ் 12, பக்கம் 633 இன் தொடர்ச்சி.)

எலிஸபெத் காலத்தின் ஏற்றம் :

எலிஸபெத் (Elizabath) ஆட்சிக் காலம் இங்கிலாந்துநாட்டின் ஈடற்ற பொற்காலம். ஏற்றமும் எழுச்சியும் மிக்க காலம் என்று ஏத்திப் போற்றுவது வரலாற்று ஆசிரியர்களின் வழக்கமாகும். அந்தக் காலத்தில் அந்நாடு இன்ப புரியாகவும் தன்னிச்சை கொண்டதாகவும் (A land of merry martals and easy morals) திகழ்ந்தது. ராணியைப் பலவாறு ராகம் போட்டுத் துதி செய்வது ஒரு சம்பிரதாயமாக வழங்கப்பட்டது. அரசியின் செல்வாக்கை அடைய அநேக பிரபுக்களும் பிரமுகர்களும் கழுதைத் தலைமுக மூடிகளை அணிந்து கண்ணியம் கெட்டவாழ்வை மேற்கொண்டனர். இலக்கியவாதிகள் வேறு எக்காலத்திலும் இத்தனை அடிமை வாழ்வை மேற்கொண்டது அறவே கிடையாது. கையில் சரக்கு இல்லாதவன் கூட, கலைஞனாகவும் கவிஞனாகவும் நின்று காலத்தில் சிறந்து விளங்கக் கருதிவாழ்ந்தனர். பொதுவாக அக்காலம் போலி வாழ்வை மிகுந்திருந்தகாலம் என்றால் அது மிகையாகாது. ராணியைச் சுற்றி இருந்தோர் ஒருவரை ஒருவர் கோள்கூறுவதும், புகார் செய்வதும், தத்தம் முன்னேற்றத்திற்காகவும் புரிந்து வந்தது வண் கூடு. இத்தகைய சூழலில் ஒரு விஞ்ஞான மாமேதை தோன்றி விளங்கி, அல்லலுற்று ஆற்றாது சிரமப்பட்டு வாழ்ந்தவர் ஒருவர் பிறந்தார். அவர் தான் பிரான்ஸிஸ் பேகன் (Francis Bacon) என்னும் அறிஞர் பெருமகனார்.

பேகனின் வாழ்க்கை வரலாறு !

பிரான்ஸில் பேகனின் தந்தை ஓர் அரசியல் வாதி. அவர் அரசாங்கத்தில் ஓர் அதிமுக்கிய பதவி வகித்து வந்தார். அவரது தாய் ஒரு மாபெரும் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். கிரேக்க - லத்தீன் மாபெரும் மரபைக் காப்பவராக வாழ்ந்தார். சர்நிகலாஸ் (Sir Nicholas) பேகனின் தந்தையார். அவர் நவீன உலகத்தின் சட்டங்களைக் கடைப்பிடித்து வந்தார். அவரது தாய் ஆன்பெரு மாட்டி (Sady Aune) பழங்காலக் கையெழுத்துப் பிரதிகளை மொழி பெயர்த்து வெளியிட்டு வந்தார். ஆகவே பிரான்ஸிஸ் பேகன் ஓர் அரசியல் பிரமுகராகத் திகழ்ந்ததும், ஒரு புலமையாளராக மிளர்ந்ததிலும் அதிசயம் இல்லை. பிரான்ஸிஸ் தம் பன்னிரண்டாவது வயதில் கேம் பிரிட்ஜ் டிரினிட்டிக் கல்லூரியில் (Trinity college 'canridge) நுழையலுற்றார். தனது பதினாறுவது வயதில் அவர் பேராசிரியர்களைக் குற்றம் சாட்டத்தக்க பெருநிலையை அடைந்தார். அவர் வெளிப்படையாக, அரிஸ்டாட்டில் (Aristatle) போதனைகளை அடிப்படையாகக் கொண்ட போதனா முறையை மேற்கொண்டது பொல்லாதது எனத் தைரியமாக அறிவித்தார்.

பிரேன்ஸிஸ் தம் வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய "இலட்சியம்" ஒன்று இருப்பதாக உணர்ந்தார். ஒவ்வொரு அறிஞரும் 'அரிஸ்டாட்டிலின் சமய நெறி" யைச் சான்றாகக் கூறி வந்தனர். உலகம் போலிக்கருத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என பிரேன்ஸிஸ் வீறு கொண்டு விளம்பி வந்தார். பேகன் பொரு ளாதார நிலையிலே மிகவும் பிற்பட்டிருந்தார். அவர்தம் தந்தை சர்நிக்கலாஸ் தனது சொத்துக்களைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித் தான்; ஆனால் பிரேன்ஸிஸுக்கு ஏதும் கொடுக்கவில்லை. அவனது ஆறுவது மைந்தனாகிய பிரேன்ஸிஸுக்குத்தான் இறக்கும் தருவா யில் ஏதாவது சொத்து வழங்க எண்ணியிருந்தான். பிரான்ஸிஸ் தம் பத்தொன்பதாவது வயதில் கையில் ஏதுமின்றிக் கஷ்டத்திற்கு ஆளானார். இஃது அவருக்குப் பெருத்த ஏமாற்றத்தை உண்டாக்கி யது. பிரேன்ஸிஸ் பெரிய இடத்துப் பிள்ளைகளோடு தொடர்பு கொண்டிருந்தார். இங்கிலாந்து தேசத்துப் பிரதம மந்திரி ஸர் வில்லியம செஸில் (Sir william cesil) தம் தாய்வழி மாமா, தமக்கு ஏதாவது உதவுவான் என எதிர்பார்த்தார். செஸில் தன் செல்லப் பிள்ளையை எல்லாத் துறையிலும் மேலோங்கவே பாடு பட்டான். எனவே அதிலும் பிரேன்ஸிஸ் ஏமாற்றமுற்றார்.

சட்டமா? சஞ்சலம் தீர்க்கும் தத்துவமா ?

பிரேன்ஸிஸுக்கு ஒரு மாபெரும் பிரச்சினை வந்துற்றது. சஞ்சலம் போக்கும் தத்துவம் பயிலவதா? அன்றிச் சட்டம் பயின்று

அரசியல் வானில் ஒளிரும் நட்சத்திரம் ஆவதா? தத்துவம் கற்று அதன் பயனைத் தரித்திர நிலையில் வாழவும் அவருக்கு எண்ண மில்லை. தத்துவத்தை விட்டு விட்டுத் தான் ஓர் அரசியல் வாதியாகத் திகழ்வதா? பிரேன்ஸிஸுக்கு இரண்டில் ஒன்றை மேற்கொள்ள ஒருப்படவில்லை. அவர் இரண்டையும் மேற்கொள்ள அவாவுற்றார். சம்பாதித்துப் பணம் சேர்க்கச் சட்டமும், ஆன்ம தாகத்தைப் போக்கிக் கொள்ள தத்துவமும் மேற்கொண்டார். கிரேயின் கல்விக் கூடத்தில் (Gray's snn) சேர்ந்து பயின்று தகுதி வாய்ந்த பட்டம் பெற்றார். பிரேன்ஸிஸ்பால் பீடுவாய்ந்த கம்பீரமான குரல் இருந்தது நல்ல ஆங்கில மொழி நடையும் அவர் பால் பொருந்தி இருந்தது. பாராளும் மன்றத்தில் இடமும் பெற்றார் பேகன். எலிஸபத் ராணியின் கடைக்கண் பார்வையும் பேகனுக்குச் சித்தித்தது. இவரது பெற்றோர்கள் இருவரும் ஈடற்ற தகுதி வாய்ந்தவர்களாக மிளிர்ந்தமையால், பிரேன்ஸிஸ்பேகன் பெருமைவாய்ந்த நன்னிலை பெற்றார். "நான் மனித சமுதாயத்திற்கு நல்ல முறையில் சேவை புரிய எண்ணிக் கொண்டிருக்கிறேன்; எங்கணும் சத்தியம் ஒளிரப் பாடு படுகிறேன், அரசியல் அதிகாரம் பெற அளவற்ற ஆசை எனக்கு. காரியங்களிலும் மக்கள் சமுதாயத்தின் மேலும் ஆதிக்கம் பெற அவாவுகின்றேன். எனக்குக் கீழ் ஒரு நூறு பணியாட்களை யாவது பெற என் நெஞ்சம் நாடுகிறது" என்பார் பேகன்.

எஸக்ஸ் பிரபுஷம் பேகனும் !

பிரேன்ஸிஸ் பேகன் பன்னிரெண்டு ஆண்டுக் காலம் ராஜசபை யில் புக அரும்பாடுபட்டார்; ஆனால் அதில் தோல்வியே கண்டார். இவரது மாமா ஒரே வார்த்தையில் இவர் விரும்பிய நிலையைத் தந்திருக்கலாம். வில்லியம் செஸில்பால்பேகன் அடிபணிந்து வேண்டிப் பார்த்தார் - அச்சுறுத்தியும் பார்த்தார் - அவர் பலன் ஏதும் பெறவில்லை. செஸிலுக்குப் போட்டியாக எஸக்ஸ் பிரபு விளங்கி வந்தார் எலிஸபெத் ராணிக்கு எஸ்ஸக்ஸ்பிரபு மிகவும் வேண்டியவர். பிரேன்ஸிஸ் தம் நாவன்மையாலும் நயமான துதி யாலும் எஸ்ஸெக்ஸின் எல்லையற்ற அன்பையும் பரிவையும் வெற்றிகரமாகப் பெற்றார். பேகன் எஸ்ஸக்னின் நட்பைஎப்படியோ பெற்று விட்டார். எஸ்ஸக்ஸுக்கு ஓர் ஏற்றமிகு பணியாளாய் பிரேன்ஸிஸ் விளங்குகிறார். எஸ்ஸக்ஸின் பரிவையும் அன்பையும் பிரேன்ஸிஸ் ஒரு முன்னேற்றப் படிக்கல்லாகப் (Stepping stone) பயன் படுத்திக் கொண்டார்.

பிரேன்ஸிஸுக்கு இத்தகைய ஒரு சாதனமும் அந்த நேரத்தில் தேவைப் பட்டது. அடிக்கடி பிரேன்ஸிஸ் கடன் உபாதையால் கஷ்டப்பட்டார். தன்ருக விருந்துகளில் கலந்து கொள்ளவும் நல்ல

லப்பிரத் தோற்றத்தை மேற்கொள்ளவும் பேகனுக்கு வாய்த்தது. எஸ்ஸக்ஸ்பிரபு இவருக்கு அளவற்ற பொருட்கொடை அளித்தான். இதன் மூலம் பிரேன்ஸிஸ் கடன்காரர் தொல்லையிலிருந்து ஒரு வாறு கஷ்டம் நீங்கப் பெற்றார். இவரது தத்துவ ஆய்வும் சற்றுச் சரளமாக மேலோங்கியது எனினும் பிரேன்ஸிஸுக்கு அரசியல் ரீதியாக ஏதொரு ஆக்கமும் தோன்ற வில்லை. மகாராணியின் மாண்புகளைப் பற்றியும் பெருமைகளைப் பற்றியும் அரிய சொற் பெருக்குகளை ஆற்றினார். ராணியின் ஆக்கம்பற்றி அரசியல் கட்டுரை களை ஆக்கிப் படைத்தார். ஒருமுறை மாண்புமிகு மகாராணி நல்ல முறையில் பேகனைப் பெருமையாகப் பேசிப் பாராட்டினாள். "திரு பேகன், நம்முடைய அபிலாஷைகளை நன்கு பாராட்டிவளர்க்கிறார்" என்று பாராட்டினாள் ராணியை : ஆனால் அவர் ராணியின் மூலம் எந்த அரசியல் அதிகாரத்தையும் அடையவில்லை. பேகன் ஏமாற்றம் தான் அடைந்தார். எஸ்ஸக்ஸ் பிரபு இவரது சிரமங்களைப் பகிர்ந்து கொண்டார். பெரிய ஒரு சொத்தை எஸ்ஸக்ஸ் பேகனுக்கு வழங்கி உதவினார்.

சொத்துக்களை எப்படியோ பிரேன்ஸிஸ் அடைந்து விட்டார். சொந்த வாழ்வை வளம் பண்ணிக் கொள்ள ஒரு சுந்தரியை அணுகினார். அவள் ஒருவிதவை – அவள் முதலில் பிரேன்ஸிஸை விரும்பினவள் என்றாலும் முடிவில் அவள் ஒரு வயது முதிர்ந்த சர்எட்வர்டு கோக் (Sir edvard coke) என்பவனை ஏழு தடைகள் இருந்தும் ஏற்றுக் கொண்டாள். ஆறு அவனது குழந்தைகள். அத்தோடு அவனும் ஒரு வயது முதிர்ந்தவன்.

பேகன் தம் ஆற்றுமையை வெளிப்படுத்த அநீதி என்ற தலைப்பில் ஓர் அருமையான கட்டுரையை எழுதினார். அதன் பயனாக அவர் சிறைபுக வேண்டி வந்தது வழக்கத்தின் படி எஸ்க்ஸ்பிரபு பேகனைத் தலையிட்டுக் காப்பாற்ற வேண்டியது ஆயிற்று. "மனித சமுதாயம் நலம் பெறச் செய்வதேஎன்பணி யாகும். அறிவுபூர்வமாகப் புதியதொரு நாகரிகத்திற்கு அடிப்படை அமைப்பது எனது குறிக்கோள். எனக்குப் போதிய அவகாசம் இருந்தால், ஓய்வு இருந்தால், பொருளாதாரப் பாதுகாப்பு இருந்தால், இதைத்தான் நான் செய்யக் கருதியுள்ளேன்.

(The betlerment of man is my province; the boundation of a new civilization of the intellect is my duty...... This is what i ought to do if only i had the time, the leisure, the binancial security)

எஸ்ஸெக்ஸின் எதிர்பாரா வீழ்ச்சி :

மெதுவாக எஸ்ஸெக்ஸ் பிரபு எலிஸபெத் அரசியின் பால் கொண்டிருந்த செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. அவன் அயர்லாந்துப் படையைக் கண்காணிக்கும் அதிகாரியாக மாற்றப்பட்டான். அரசி அறியாதவாறு எஸ்ஸெக்ஸ் அயர்லாந்தை விட்டுத் திரும்பினன். அதன் விளைவு அரசியால் கைது செய்யப்பட்டான். அவனது மனம் குழம்பியது. பைத்தியம் பிடிக்குமோ என்ற நிலை எஸ்ஸெக்ஸ்பிரபுக்கு ஏற்பட்டது. தற்போது பேகன் நிலையாது? எலிஸபெத் ராணி எப்படியோ எஸ்ஸெக்ஸின்பால் ஓர் எதிர்ப்பான எண்ணம் கொண்டாள். இதற்குக் காரணம் பேகன்தான் என அரசாங்க வட்டாரத்தில் முணுமுணுக்கப்பட்டது. எஸ்ஸெக்ஸ் மீது இராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டது. எஸ்ஸெக்ஸ் நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். பேகன் எதிர்கட்சியில் வாதாடினர். எஸ்ஸெக்ஸ் எலிஸபெத்திற்கு எதிராக நின்று ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார் என்பது பேகனின் பலமான வாதம். இறுதியில் எஸ்ஷெக்ஸ் ராஜ துரோகக் குற்றம் புரிந்தான். ஆகையில் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்படவேண்டும் என முடித்தார் பேகன். இந்த வழக்கை ஏற்று பேகன் நடத்தியதற்காக அரசாங்கத்திடம் இருந்து பன்னிராயிரம் பவுண்டு பரிசாகப் பெற்றார்.

அந்த நேரத்தில் பேகன், மனித வாழ்வு நீட்டிப்புப் பற்றி ஒரு மருத்துவ ஆய்வு நூல் எழுதி முடித்தார்.

சிந்தனையாளர் பேகனின் சிறப்பியல்புகள் :

பேகனிடம் செழுமை சான்ற புலமை மிக்க அறிவு மிளிர்ந்தது. அதை அவர் நல்ல செயலுக்கும் பயன்படுத்தினர். அல்லதற்கும் பயன் செய்தார். பேகன் தன்னைப் பற்றித் தருக்கோடு பேசுவார். "எவருக்கும் இணையற்ற முறையில் என்னால் ஆய்வு செய்ய முடியும். சட்ட நுணுக்கங்கள் எந்த ஆங்கிலேயனை விடவும் எனக்குத் தெரியும். என்னிலும் கிரேக்க மொழியிலும் இலத்தீன் மொழியிலும் புலமையுடையார் எவர் உளர்? நான் கல்வியில் ஒரு கலைக்களஞ்சியம். அரிஸ்டாட்டில் காலத்திலிருந்து எல்லாவித விஞ்ஞான அறிவிலும் என்ன என்ன தவறுகள் செய்துள்ளனர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்"

பண்டைய கிரேக்கர்கள் விஞ்ஞானக் கருத்தைக் சமயவியல் கருத்தோடு குளறுபடி செய்ததாகப் பேகன் பேசுவார். தண்ணீர் ஆவியாகிறது; பின்னர் நிலத்தில் விழ்கிறது; அஃது ஏன் என்றால் கடவுள் பயிர்களைக் காக்கவும், மனித இனத்திற்கு நலம் விளைக்கவும் மழைபெய்விக்கிறார் எனப்பண்டைய கிரேக்கர்கள்பாராட்டுவர்.

இதைப் பிரான்ஸிஸ் ஏற்பதில்லை விஞ்ஞான ரீதியாக எதையும் ஆய்வு செய்ய வேண்டும் எனச்சுட்டுவார் பேகன்.

பேகன் செலவு செய்வதில் ஊதாரித்தனமாக இருப்பார். சில தடவைகள் கடன் பட்டுச் சிறைவாசம் செய்ததுண்டு.

எஸ்ஸெக்ஸ் பிரபுவின் மறைவுக்குப் பின் இரண்டாண்டுகளில் எலிஸபெத் மறைந்தாள். அதன் பின் முதலாவது ஜேம்ஸ் (James I) பட்டம் ஏய்தினர். மன்னனைப் போற்றிப் பாராட்டி "நைட்" (Knight) விருது பெற்ருர். இவர் பாராளுமன்றத்தில் உறுப்பினராக விளங்கியபோது, மன்னரின் பக்கம் நின்று மனம் திறந்து போற்றினர் அதன் விளைவாக பேகன் உயர் பதவி பெற்ருர் (Solicitor general of England) பேகன் ஒரு பிரமாதமான கட்டுரை கல்வியின் சிறப்பைப் பற்றி எழுதினர். (On the Advancement of Learning) இவரது அறிவு வயதாக ஆக நுண்மை கொண்டு நூதனக் கருத்துக் களை அள்ளி வீசியது. இவர்பால் தத்துவ சாத்திரம் விஞ்ஞானப் பாதையில் நுழைந்து விளக்குமுறத் திகழ்ந்தது.

பிரேன்ஸிஸ் அரசன்பால் அநேக விண்ணப்பங்கள் விடுத்துக் கொண்டே இருந்தார். இறுதியில் சர்பிரேன்ஸிஸ் அட்டானி ஜெனரலாக ஆக்கப்பட்டார். அதிக அதிகாரப்-அதிக பணி ஆட்கள்-அதிக வருவாய். அடுத்த நிலையும் பெற்ருர். சான்ஸெலர் பிரபுவாக (Lrd Chancellor) நியமனம் செய்யப்பட்டார். சில ஆண்டுகளில் பிரேன்ஸிஸ் இலஞ்ச ஊழல் குற்றத்திற்கு ஆளானர். "பரிசு பெறுதல்" (Gift taking) என்ற முறையில் பணம் சேர்த்தார் எனக் குற்றம் சாட்டப் பட்டார் பிரேன்ஸிஸ். இறுதியில் இவர் தாம் ஏற்ற பதவியைராஜிஞமா செய்யவேண்டியதாயிற்று. சில ஆண்டுக் காலச் சிறைவாசமும் வாய்த்தது. பிரேன்ஸிஸ் பின்னும் மனம் தளர வில்லை. மன்னருக்கு கத்தைக் கத்தையாகக் கடிதங்கள், மேல் ஸ்தாயில் தோத்திரம். பணிவான பாஷை, ஆனல் அவர் வயதை ஏமாற்ற முடியுமா? அறுபத்து ஐந்தாவது வயதில் ஆவி நீத்தார்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Stroll
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

திருமுறைகளைப் போற்றுவோம்

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

(மலர் 49, இதழ் 2, பக்கம் 78 இன் தொடர்ச்சி)

எல்லாம் சிவன் செயல் :

இறைவன் தன் வடிவையும் அருளையும் நாம் உணருமாறு காட்டுகிறான்; அவன் காட்டினால்தான் பார்க்க முடியும். நம் அறிவாலோ ஆற்றலாலோ பக்தி உணர்வை நாம் பெற்றுவிட முடியாது.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகு வித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே

ஆட்டுவித்தால் யார்தான் ஆடமாட்டார்கள்? (உயிர்களைப் படைத்தும், காத்தும், அழித்தும், தம் விருப்பப்படி ஆட்டி வைக்கிறவன் இறைவனே) அடங்கு என்று கூறி அடங்குமாறு செய்தால் யார் தான் அடங்கமாட்டார்கள்? (தம் அலகிலா விளையாட்டை அவ்வப்போது நிறுத்தி, உயிர்களுக்கு இளைப்புத் தேறும்படி செய்பவனும் இறைவனே) ஓடு ஓடு என்று ஊக்கி ஓடுமாறு செய்தால் யார்தான் ஓடமாட்டார்கள்? (உயிர்கள் தம்மை நினைக்காதவாறு வேறு கருமங்களில் அவற்றைச் செலுத்தி ஓட்டுபவனும் இறைவனே) கல்மனம் உடைய உயிர்களைக் கருணை வடிவமாக மாற்றி உருகுமாறு செய்தால் யார்தான் உருகமாட்டார்கள்? (இறைவன் முன்னின்று உதவித் தம்மை நினைக்குமாறு செய்கிறான். அவன் உதவி இல்லாவிட்டால் நாம் அவனை நினைக்க முடியாது. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பதே உண்மை) 'பாடு' 'பாடு' என்று ஊக்கம் தந்தால் யார்தான் பாடமாட்டார்கள்? (இறைவனைப் புகழ்ந்துபாட விரும்பினாலும் அவ்வாறு

பாடுமாறு செய்ய வேண்டுவதும் அவனே; நாமாகப் பாடிவிட முடியாது), தம்மைப் 'பணிக' எனக் கட்டளையிட்டுப் பணியுமாறு செய்தால் யார்தான் பணிய மாட்டார்கள்? (தன் முனைப்பு நீங்கிய உயிர் இறைவனின் தாளில் விழுந்து வணங்குவதே பணிவு. இந்தப் பணிவும் தாமாக வருவதன்று; இறைவன் தர வருவதே) 'இதோ இதைப் பார்' என்று காட்டினால் யார்தாம் பார்க்க மாட்டார்கள்; இறைவன் காட்டினாலன்றோ நாம் காண முடியும்? தாமாகக் காண்பார் யார்?

எல்லாம் அவனே :

உலகத்தில் உள்ள மக்கள், ஏனைய உயிர்கள், பஞ்ச பூதங்கள் அனைத்தையும் இறைவனாகவே கருதிப்பார்க்கிறார் திருநாவுக்கரசர். எல்லாமே இறைவனின் வடிவம் என்று கண்டு கொண்டால், தனியாக ஒரு இறைவனைத் தேடவேண்டா அல்லவா?

" அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே "

தந்தை நீ! எனக்குத் தாயாக இருப்பவனும் நீ! தமையன் நீ! என்பால் தனித்த பேரன்பு காட்டும் மாமனாகவும் மாமியாகவும் இருப்பதும்நீ! என்னோடு எல்லாவகையாலும் (வயதால், அறிவால், பண்பால் கல்வியால்) ஒத்திருக்கின்ற மனைவியும் நீ! எனக்கு உலக வாழ்வில் நிறைவுதரும் செல்வமாக இருப்பதும் நீ! எனக்குக் குலத் தாராக சுற்றத்தாராக இருப்பதும் நீ! ஊர்மக்களாக இருப்பதும்நீ! நான் துய்த்து மகிழும் இன்பங்கள் நீ! என்னை வழிகாட்டுவதும் நீ! உலக இன்பங்களில் நான் தடுமாறி விழுந்து கிடவாமல் எனக்குத் துணையாகி என்னைத் தடுத்தாட் கொள்ளுவதும் நீ! பொன்னும் மணியும்நீ! முத்தும் நீயே! இடபவாகனத்தில் ஏறிவரும்செல்வனே! இறைவனும் நீயே! எல்லாம் நீயே!

இறை நெறி யாது ?

இந்தக் கேள்விக்குத் திருநாவுக்கரசர் பதில் கூறுகிறார். திருக் கோயிலுக்குச்சென்று, கூட்டுதல், பெருக்குதல், திருமுழுக்காட்டுதல், பூமாலை சார்த்தல், விளக்கேற்றி வைத்தல், தோத்திரப் பாக்களைப் பாடுதல் முதலியன செய்வது இறை நெறி என்பது கருத்து.

"விளக்கினுற் பெற்ற இன்பம் மெழுக்கினுற் பதிற்றியாகும்,
துளக்கில்நன் மலர் தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்,
விளக்கிட்டார்ப் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்,
அளப்பில கீதஞ் சொன்னுர்க் கடிகள் தாம் அருளுமாறே"

திருக்கோவில்களைத் துடைப்பத்தால் பெருக்கினுல் (தூய்மை செய்தால்) புண்ணியம் கிட்டும். கோயில்களை நீராட்டிக் கழுவித் தூய்மை செய்தால் முன்பெற்ற புண்ணியம் போல் பத்துமடங்குப் புண்ணியம் அதிகமாகக் கிட்டும். ஒளியுடைய நல்ல பூக்களால் அருச்சித்தால் விண்ணுலகம் செல்லவும் கூடும். நாள்தோறும் எண்ணெயிட்டு விளக்கினை ஏற்றி வைத்தால் அப்படிச் செய்பவர்கள் மெய்ஞ்ஞானம் அடைவர். யார்தோத்திரப் பாடல்களை இசையோடு பாடி இறைவனை வழிபடுகிருர்களோ அவர்கள் பெருமை அளந்து இவ்வளவு எனக்கூற முடியாத ஒன்ருகும். இவ்வாறு திருக்கோயில் பணி செய்வார்க்குச் சிவபெருமான் எல்லா இன்பங்களையும் அருளுவான்.

பக்தி :

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவைத் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவுபோல் காட்டியும் பாடியிருக்கிருர் நாவுக்கரசர். திருவாரூர்ப் பெருமானது திருப்பெயரைக் கேட்ட வுடனேயே தன் வயம் இழந்து காதல்வாய்ப்பட்ட ஒருத்தியின் தன்மையை, அவளது தோழி சொல்வது போல் அமைந்த ஒரு திருப்பாட்டைக் காண்போம்.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கைதன் தலைவன் தாளே"

முதலில் சிவபெருமானுடைய பெயர் யாது எனக் கேட்டாள்; அவன் எப்படி இருப்பான்? அடையாளங்கள் என்னென்ன? என்று கேட்டாள். அவன் எழுந்தருளியிருக்கும் திருவாரூரைப் பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லுங்கள் என்று கேட்டாள். அவ்வளவு தான்! அவன் மேல் பித்துக் கொண்டவள் போல் ஆகிவிட்டாள்;

அவனையே நினைந்தாள். அதுவரைத் தன்பால் அன்புபாராட்டி வளர்த்து வந்தாளே தாய், அவளை மறந்தாள்; தந்தையை மறந்தாள்; ஒரு பெண் வீட்டுக்குள்ளேயே இருத்தல் வேண்டும், காதலனைத் தேடிக் கொண்டுதானே போகக் கூடாது என்று கூறப் படும் ஆசாரத்தை எல்லாம் விட்டாள்; தன்னையே மறந்தாள்; தான் ஒரு பெண் என்பதையும் மறந்தாள்; சிவபெருமானின் மீது தீராக் காதல்கொண்டு அவனது திருவடிகளிலே விழுந்துவிட்டாள்.

முக்தி அடையும் வழி :

சாகும் போதும் இறைவன் நினைவே வரல் வேண்டும் என்ற கருத்திலே ஒரு அழகிய பாடல் உண்டு.

" மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை யூன்றிச்,
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகட லோடும் போது,
மதனெனும் பாறை தாக்கி மறியும் போதறிய வொண்ணா,
துனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே "

மனம் என்பது தோணி; அறிவுடைமைதான் அத்தோணியைச் செலுத்தும்கோல். சினம்என்பது பாரம்; அதுவே இங்குச்சரக்காகும். காமம் என்னும் ஆசையே கடலில் அமிழ்ந்துள்ள பாறை. (இவ்வாறு உருவகம் செய்து இப்பாடலை உணர வேண்டும்).

மனத்தோணி ஏறி, மதிக்கோலை ஊன்றி, சினச்சரக்குகளோடு வாழ்க்கை என்கிற கடற்பரப்பில் நாம் போகும் போது காமமாகிய பாறையில் தோணி மோதி உடைந்து போகலாம்; அவ்வாறு நான் கீழ் மேலாகக் கவிழ்ந்து தத்தளிக்கும் போது, திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள என் சிவபெருமானே, நான் என்னை மறந்து உன்னையே நினைக்க வேண்டும். அத்தகைய உணர்வை எனக்குத் தரவேண்டும்.

இத்திருப்பாடலை மறவாது எப்போதும் ஓதி வருவது முத்தி யடைய விழைவார் கடன் என்று பல பெரியோர்கள் கூறி இருக் கின்றனர். மறவாது அடிக்கடி நினைவு கூற வேண்டிய பாடல் இது.

முடிவுரை :

பல நிறுவனங்கள் தேவாரப் பாடல்களையும், பெரியபுராணப் பாடல்களையும் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பாடல்களுக்குப் பொருள் அல்லது உரைகள் வெளியிடப் படவில்லை. பொதுவாகத் தேவாரப்பாடல்கள் எளிய தமிழில் இருப் பதால் உரை தேவையில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் தமிழ்

அறிஞராக இல்லாதவர்களுக்கு முழுவதுமாகப் பாடல்கள் புரிவதாகச் சொல்ல இயலாது. சாதாரணமக்கள் புரிந்து கொள்ளும் வகையில் மூலமும் உரையும் அடங்கிய புத்தகம் தயாரித்துக் குறைந்த விலைக்கு விற்றால் நன்றாக இருக்கும்.

நமது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் தமிழ் இசை ஆராய்ச்சிக்கு இடம் உண்டு. தமிழ் இசையில் ஆராய்ச்சி நடத்த ஒரு திட்டம் வரையப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் தமிழ்இசை ஆராய்ச்சி நூல் வெளியிடக்கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஓங்குக சிவன் நாமம்!

புராணத்தில் உள்ளதென்ன?

புராணத்தில் இல்லாததென்ன? மறைகளிலுள்ள வேள்விகள் பிரம்மா முதல் கொசு ஈறாக உள்ள உயிரினங்களின் படைப்பு, பிரும்மாண்டத்தின் அமைப்பு, நவக்கிரக மண்டலம் அவைகளின் சலனம், அதனாலுண்டாகும் நன்மை தீமைகள், சிருங்காரம் முதல் பிரும்மவித்தை ஈறாக உள்ள சாத்திரங்கள், நக்ஷ நட்சத்திர மண்டலம், சொர்க்க நரகம், பதினான்கு உலகங்கள், அங்கே வாழ் பவரின் சரிதம், ஆலய அமைப்பு, தேவதைகளைப் பிரதிஷ்டை செய்தல், விரதங்கள், துதிகள், சிற்பம், கோபுரம், பிராணிகளின் உடலமைப்பு, நாடிகளின் எண்ணிக்கை, மூச்சு, உடல், எலும்பு, உரோமம் இவற்றின் எண்ணிக்கை, பிறத்தல், இறத்தல், பின் ஜீவன் செல்லுமிடங்கள், மேகம், மழை, சூரிய சந்திர கிரஹணம், கால அளவு, சங்கீதம், நடனம், காவிய நாடக அமைப்பு, கீதைகள் சகுனம், கனவு, நோய், அதை அகற்றும் வழி, விலங்கு, செடிகொடிகளுக்குச் சிகிச்சை, பாம்பு எத்தகைய முட்டையிடும், கூடுவிட்டுக் கூடுபாயும் வகைகள். நீதி, விமானம், ரதம், வெற்றி பெறவழி, சூன்யம் வைப்பது எடுப்பது, பசியின்றி இருக்க இருந்து எங்கு வசிக்கவேண்டும்? யாருடன் பழக வேண்டும்? நமக்காக, பிறருக்காக என்ன செய்ய வேண்டும்? குருபரம்பரை, சீடர் கடமை, ஞான, பக்தி, கருமம், வேதாந்தம் இன்னும் பலஎண்ணற்ற விஷயங்கள், புராணத்தில் உள்ளன.

— சைவ சமயம் வரலாற்றுப் பார்வை.

எது வழிபாடு?

திரு. கருமுத்து. சு. சொக்கலிங்கம்

மதுரை.

வழிபாட்டின் இலக்கணம் :

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும் இறைவன் வழியில் செலுத்துதல் வழிபாடாகும்.

வழிபாடு ஏன் தேவை ?

ஒவ்வொருவரும் வழிபாடு புரிதல் என்பது இன்றியமையாத ஒன்றாகும். நமக்கு இந்த உடலையும் உலகவாழ்வையும்கொடுத்தவன் இறைவன். இவற்றைக் கொடுத்து நம் அறிவை விளங்கச் செய்கிறான். இந்த உதவியை நினைந்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவனை வணங்குதல் வேண்டும்.

வழிபாட்டின் படிநிலைகள் :

வழிபாட்டைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு படிநிலைகளாக வைத்துப் பார்க்கும் மரபு காணப்படுகிறது.

இறைவனது உருவத்தை வழிபடுதல் சரியை எனப்படும். இறைவனை ஆன்மார்த்தமாக அருவுருவ நிலையில் வைத்துவழிபடுதல் கிரியை எனப்படும். இறைவனை அருவமாக ஒளிவடிவில் கண்டு உள்ளத்தில் தியானித்து ஒன்றுதல்யோகம் எனப்படும். இம்மூவகை வழிபாட்டின் பயனாக வருவது ஞானம்.

ஆலயம் சென்று வழிபடுவது, விளக்கேற்றுவது, மெழுகுவது, அடியார்க்கு அன்னம் பாலிப்பது ஆகியன சரியையில் நடைபெறுகின்றன; வீட்டில் தனிப்பூசை அறை வைத்து, நைவேத்தியம் படைத்து, தீபதூபம் காட்டி வழிபடுதல் கிரியையில் நடைபெறுகின்றது. இறைவனை அருவமாக நினைத்து, உள்ளத்தால் ஒன்றி நிற்பது யோகத்தில் நடைபெறுகிறது. ஞானநிலையில் வைத்து இறைவனை வழிபடுவது ஞானத்தில் நடைபெறுகிறது.

உருவ வழிபாடு தேவையா ?

எதையும் பருப்பொருளாகக் கண்டு நுண்பொருளாக உணர முயல்வது உயிரின் இயல்பாகும். அதாவது பருமையாக அறிந்து நுண்மையை நோக்கிச் செல்வது அதன் பண்பு எனலாம். தொடக்க நிலையில், நம்முடைய மனம் இறைவனைப் பற்றுவதற்கு உருவம் தேவைப்படுகிறது.

இப்படி உருவத்தை வழிபட, வழிபட உயிரின் அறிவானது முதிர்ச்சி அடையும்; அதனால் மனம் பக்குவப்படும்; அதன் பயனாக அருவுருவ நிலையினை உணர்கின்ற ஆற்றலை உயிர்பெறும்.

அருவுருவ நிலையினை வழிபட்டு வழிபட்டு அதன் பயனாக அருவமாகக் கண்டு வழிபடுகின்ற மனமுதிர்ச்சி தோன்றும்.

அருவத்தையும் கடந்த நிலையும் உண்டு. இறைவனை ஞான மயமாக வைத்து வழிபடுகின்ற நிலை அது.

இறைவனுக்கு இப்போது நாம் கற்பிக்கும் உருவம் அவனுக்கு உரிய உருவம் இல்லை. மனிதனுக்கு உருவம் இருப்பது போல இறைவனுக்கு உருவம் இருப்பதில்லை. உருவம் உடையவை எல்லாம் அழியக்கூடியவை. இறைவன் அழிவில்லாதவன்; ஆதலின் அவன் தனக்கென்று உருவம் உடையவன் அல்லன். ஆனால் மக்கள் இறைவனை உணர்ந்து வழிபட வேண்டும் என்ற கருணை யினாலே அவரவர் நினைந்த உருவில் தோன்றி அவன் அருள் புரிகிறான். அதனால் தான்,

"எவ்வுருவில் யாரொருவர் உன்குவரர் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான"

— பதினோராம் திருமுறை.

எனவும்,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்" — சிவஞான சித்தியார்.

எனவும் சமயச் சான்றோர் இறைவனின் உருவம் பற்றிக் குறிப் பிட்டனர். ஆதலின் தொடக்க நிலையில் மனம் பற்றுதற் பொருட்டு உருவ வழிபாடு தேவைப்படுகிறது.

வன்முறை வழிபாடு தேவையா ?

இறைவனை வழிபடும் போது பலியிடல், கடுமையான நேர்த்திக் கடன்கள் போன்ற வன்முறை வழிபாடு தவிர்க்கப்படுதல் நலம்.

பூவும் புகையும் இட்டு வழிபடும் மென்முறை வழிபாடே அடியார்க்கும் இறைவனுக்கும் இன்பம் தருவது.

" நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே "

என வழிபடும் முறை பற்றி நம் முன்னோர்கள் எடுத்துக் கூறியுள்ளதை நினைவில் கொள்ளுதல் நலம்.

" வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங் காலமே "

என எளிய வழிபாட்டில் இறைவனை மகிழ்விப்பதே நன்று.

உண்மையான வழிபாடு :

ஒரு மாமியார் நாளும் கோவிலுக்குச் சென்று இறைவனின் பாதம் பணிந்து விட்டு, வீட்டிற்கு வந்ததும் மருமகளிடம் சீர்வரிசை கொண்டுவரச் சொல்லி அவளைத் துன்பப்படுத்துவாளேயானல் அவள் செய்யும் வழிபாட்டால் என்ன பயன்?

ஒரு கணவன் மனைவி மக்களைக் கவனியாமல், ஆண்டவனின் பக்தனாக மட்டும் விளங்கினால், அவனது பக்தியால் இந்தச் சமுதாயத்திற்கு என்ன லாபம்?

மனத்தூய்மையோடும், மனிதத் தன்மையோடும் இருந்து கொண்டு வழிபாடு செய்வதே உண்மையான வழிபாடாகும். அதுவே இறைவனை மகிழ்ச்சிப்படுத்தும்.

நன்றி : மதுரை வானொலி நிலையம் மலர் 49, இதழ் 1, 2 ஆகிய இதழ்களில் முறையே வெளியான எது கோபம்? எது தவம்? என்றும் கட்டுரைகளும் எது வழிபாடு? என்றும் இக்கட்டுரையும், கட்டுரையாசிரியர் அக்டோபர் 89 இல் 12, 19, 26 தேதிகளில் மதுரை வானொலியில் ஆற்றிய உரை.

❋ வாயிலார், முனையடுவார் ❋

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் 7—1—1990 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அன்று வேளூர்க்கிருத்திகை. முதல்ஞாயிறும் கூடிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் ஸ்ரீ சொக்கநாதர் பூசையை நிறைவு செய்து கொண்டு வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கிருத்திகை அபிஷேகத்திற்கு எழுந்தருளவேண்டும். நியமமாக வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கிருத்திகை விசேஷ அபிஷேகத்திற்கு எழுந்தருளுவதும் முன்னின்று நிகழ்த்துவிப்பதும் வழக்கம். அன்று வைகுண்ட ஏகாதசியும் இணைந்தது. பூசையை நிறைவு செய்து கொண்ட குருமணிகள், திருஇந்தளூர் ஸ்ரீபரிமளரங்கநாதசுவாமி திருக்கோயில் வழிபாடு, வேளூர் வழிபாடு செய்தருளினார்கள், பகல் முழுமையும் வழிபாடு, அலுவலகப்பணிகள் காரணமாக அன்று மாலை 7 மணிக்கு அருளுபதேசக் கூட்டம் நடைபெற்றது. அன்பர்கள் வழக்கம்போல வந்திருந்து ஸ்ரீலஸ்ரீ குருமணிகளை வணங்கித் திருநீறு பெற்று அணிந்து அமர்ந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் வழக்கம்போல் குருதோத்திரம் செய்து கொண்டு உபதேசம் தொடங்கினார்கள். அன்று வாயிலார் முனையடுவார் புராணங்கள் உபதேசிக்கப்பெற்றன. வாயிலார் தொண்டை நாட்டினர். திருமயிலாபுரி என்னும் பதியினர். மயிலாபுரி, உமையம்மையார் மயிலுருவம் எடுத்துப் பூசித்த தலம். தற்போது சென்னையில் அமைந்துள்ளது. மயிலாப்பூர் என வழங்குகின்றது. பழமையானதும் பாடல் பெற்றதுமாகிய இத்தலத் திருக்கோயில் சாந்தோம் கடற்கரையில் அமைந்திருந்தது. கிறித்துவர்களின் ஆதிக்கம்காரணமாக அழிந்தது. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முன் பூவிருந்தவல்லி முதலியார் வகையினரின் பெருமுயற்சியால் தற்போதுள்ள இடத்தில் ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இத்தலத்தில் வாயிலார் குடியில் தோன்றியவர் வாயிலார். குறுக்கையர்குடி, சேக்கிழார்குடி என்பது போல வாயிலார் என்பது குடிப்பெயர். வாயிலார் நாயன்மாராகிய

வேளாளர் பதின்மூவரில் ஒருவர். சேக்கிழார், வாயிலார் குடியைத் ‘ தொன்மை நீடிய சூத்திரத்தொல்குடி '' எனவும் "வாயிலார் என நீடிய மாக்குடி'' எனவும் குறிப்பிடுகின்றார். சூத்திரக்குலம் என்பது வேளாண்குடி. வேள்+ஆளர்=வேளாளர், வேள் - மண்; மண்ணை ஆள்வோர்; உழுதொழிலால் உலகுபுரப்போர் என்னும் பொருளது. குயவர் வேட்கோவர் எனப்படுவர். வேள்+கோவர்=வேட்கோவர் மண்ணைக் குழைத்து உதவுவோர் என்பது இதன் பொருள். வேளாளர் என்பார். வெள்ளாளர் எனவும் குறிக்கப்பெறுகின்றனர். வெள்ளத்தை (தண்ணீரை) ஆள்பவர்; அதாவது நீரால் நிலம்புரப் போர் என்னும் பொருளது இது. வேளாளருள் ஒருவராகிய வாயிலார் இறைவனை அடையும் வாயிலாகவும் இருந்தார். இங்ஙனம் குடிப் பெயர் விளக்கம் அருளினார்கள்.

அடுத்து வாயிலார் தோன்றிய மயிலாபுரி பற்றிச் சில குறிப்புக் களை நல்கினார்கள்.

> " துறைக் கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
> தொன்மயிலை வாயிலார் ''

என்பது ஸ்ரீ சுந்தரர் திருத்தொண்டத் தொகை. சுந்தரர், கடல் வளம் மிக்கது மயிலாபுரி என்றார். சேக்கிழார் மேலும் விளக்க லுற்றார்; மல்லல் நீடியது; வாய்மை, வளம்மிக்கபதி; பல்பெருங்குடி நீடியது; பரம்பரைச் செல்வம் மல்கியது – என இங்ஙனம் விளக்கும் சேக்கிழார். தகர் மற்றும் கடல் வளத்தை 1 முதல் 5 பாடல் வரை அருளினார்.

சேக்கிழார் திருமயிலாபுரியைச் செல்வம் மல்கு திருமயிலாபுரி என விளக்கினார். அடுத்தபுராணமாகிய முனையடுவார் புராணத்தில் திருநீடூரைச் "செல்வம் நீடூர் திருநீடூர் '' என அருளியமையை இதனோடு ஒப்பிட்டார்கள், செல்வம் மல்கிய ... பாராய்த்துறை; செல்வம் மல்கு திருமங்கலக்குடி - என்பனவும் இவைபோலவும் அமைந்த திருமுறைத் தொடர்களையும் எடுத்தோதி ஒப்பிட்டருளி யமை தோத்திர நூற்புலமை நுட்பம் தோன்ற அமைந்தது.

வாயிலார் செய்த அருட்பணியை இனிதே விரித்து ஓதினார்கள். பூசலார் நாயனார் மனக்கோயில் கட்டினார்; மனத்திற்குள்ளேயே நன்னாள் குறித்தார். திருக்கோயிற் குடமுழுக்குச் செய்வித்தார். இறைவன் அங்கு எழுந்தருளினார், முறைப்படி நாயனார் வழிபட்டார் என வரலாற்றை அருளி வாயிலார் புராணத்துடன் அகவழிபாட்டு நிலையை ஒப்பிட்டுத் தொடர்ந்தார்கள். வாயிலார் நாள்தோறும் மனத்திற்குள்ளேயே சிவபூசை புரிந்தார். இத்தகைய உண்முகப்

பூசையை அகப்பூசை என்றும், அந்தர்யாகபூசை என்றும் குறிப்பர். இங்ஙனம் வாயிலார் செய்தருளிய பூசை முறையைச் சேக்கிழார்,

"மறவாமையான் அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதிதனை உணரும் ஒளிவிளக்குச் சுடர் ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பாளினும் அமுது அமைத்து அர்ச்சனை
[செய்வார்"

எனப் பாடியருளினர்.

மறவாமை என்பது ஸ்தாபனம்; மனம் கோயில்! - எதனை மறவாதிருப்பது? இறைவனது குணநிசயங்களை! அவற்றை மனத்தால் நினைப்பதேவழிபாடு. இறையருளை மனத்தால் நினைப்பது சாதனம். "நின்றயங்கி ஆடலே நினைப்பதே நியமமே" என்பது ஞானப்பிள்ளையார் திருவாக்கு. புறப்பூசையைவிட அகப்பூசையே மேலானது. அகப்பூசைசெய்யப் புறப்பூசை துணையாக அமைகிறது. அகப்பூசை முறையினைத் திருமூலர்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய்கோ புரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்ற திருமந்திரத்தால் விளக்குகின்றார்.

வாயிலார் மனக்கோயிலில் ஞானஉறவாம் சுடரேற்றி ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் ஆட்டி அறவாணனாம் பெருமானுக்கு அன்பு என்னும் திருவமுது அமைத்து அர்ச்சனை புரிந்தார். இறைவனை அறவாணன் என்ற சொல்லால் சேக்கிழார் குறிப்பதை மொழியியல் முறையில் விளக்கினர்கள் - வாழ்நர் - வாணர் - அறம்+வாழ்நர் = அறவாழ்நர் - அறவாணர் - அறவழி நடப்பவர். இசைவாணர், கலைவாணர்கள் என்ற தொடர்களின் அமைப்பும் இத்தகையதே. பெருமானின் விடைக்கொடியும் இடபமும் அறவழி காட்டுவன காரைக்காலம்மையார் புராணத்திலமைந்த, அறவா! நீ ஆடும் போதுன் அடியின் இருக்க' என்ற தொடரும் இறைவன் அறவன் எனக்காட்டுகிறது. ஞானசம்பந்தரும் சீகாழிப்பதிகத்தில் இறைவன் அறவன் எனப்போற்றுகிருர்-எனத்திருமுறைச் சான்றுநல்கினர்கள்

அகப்பூசையில் எட்டுமலர்களாகக் கொள்ளப்படுவன இவை என்பதைச் சிவசமய நெறியில் அருளிச்செய்து உய்யக்கொண்டருளினர்கள். அவை வருமாறு :-

அகப்பூசையில் எட்டுவிதமான குணங்களையே புஷ்பங்களாகப் பூஜிக்க வேண்டும்.

1. அஹிம்ஸா புஷ்பம் :- எந்த விதமான ஜீவஹிம்ஸையும் செய்யாதிருந்து அந்நிலையையே புஷ்பமாக்கிச் சாத்துதல்.

2. இந்திரிய நிக்ரஹ புஷ்பம் :- கன்மேந்திரிய, ஞானேந்திரியங்களை உலக விஷயங்களில் ஈடுபடுத்தாது தன்வசப்படுத்தி யோகமார்க்கத்தில் செயல்படுத்துதல். இந்திரிய நிக்ரஹம் எனப்படும். இது ஒரு புஷ்பம்.

3. க்ஷமா புஷ்பம் :- கோபம் குணத்தைக் கெடுக்குமாதலாற் கோபமே கொள்ளாதிருப்பது யோகிகளுக்கே சாத்தியம். அப்படிப் பொறுமையுடனே இருந்து அதையே ஒரு புஷ்பமாக அர்ப்பணம் செய்தல்.

4. தயா புஷ்பம் :- பாரபட்சம் பாராது அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல்.

5. ஞான புஷ்பம் :- பர ஞானமாகிய சிவஞானத்தையே புஷ்பமாகக் கொண்டு பூஜித்தல்.

6. தபோ புஷ்பம் :- தவம் செய்வதையே வாழ்க்கையாகக் கொண்டு அத்தவத்தையே புஷ்பமாகப் பூஜித்தல்.

7. சத்திய புஷ்பம் :- வேதங்கள் கூறுகின்ற வாய்மையே விரதமாகக் கொள்ளவேண்டும். அவ்வாய்மையே சிவபெருமானுக்கு ஒரு புஷ்பமாகும்.

8. பாவ புஷ்பம் :- சிவனே தானாகப் பாவித்தல், "பாவம்" எனப்படும். இது ஒரு புஷ்பமாகும்.

இப்படியாக ஆன்ம ஞானிகள் அகிம்சாதிகளையே எட்டுவிதமான புஷ்பமாகக் கொண்டு அர்ச்சிப்பார்கள்-இது அந்தர்யாக பூசைக்குரியன.

புறப்பூஜையில் இடம்பெறுகின்ற எட்டு புஷ்பங்கள் :- எருக்கு, செண்பகம், கொன்றை, நந்தியாவர்த்தம், மல்லிகை, கண்டங்கத்திரி, அரளி, தும்பை. புறப்பூசையில் அட்டபுஷ்பம் சாத்தி வழிபடும் முறையை, அப்பர் சுவாமிகள் "எட்டு நாண்மலர் கொண்டடி ஏத்துமின்" என அருளிச் செய்தார்.

இவ்வாறு அகப்பூசையசம் உண்முக வழிபாடு ஆற்றிச் சிவனடி நீழல் எய்தினர் வாயிலார். வாயிலார் சேக்கிழாரால் "புண்ணிய மெய்த்தொண்டனர்" எனப் போற்றப்பெற்றுர்.

தொடர்ந்து முனையடுவார் புராண உபதேசம் செய்தருளினர் கள். "அறைக்கொண்ட வேல் நம்பி முனையடுவார்க்கு அடியேன்" என்பது சுந்தரர் செந்தமிழ். காவிரி பாயும் சோழநாட்டினர் இவர் அறைக்கொண்ட வேலினர். அதாவது குத்தி வீழ்த்தும் வேலினை உடையவர். வள்ளன்மை மிக்க வேளாளர் மரபில் தோன்றியவர்: சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சினைக்கொண்டவர். வேண்டிக்கொள்வோர்பொருட்டுப் பகைவரைப் போரில்வெல்வார். அதனுக்காக ஊதியம் பெறுவார். ஊதியமாகக்கிடைக்கும் பொருள் களைக்கொண்டு சிவனடியார்க்கு அமுது செய்விப்பார்.

போரில் பகைவர்களுக்குத் தோற்றேர் தம்மிடம் வந்து பெரு நிதியம் அளித்துத் தமது துணை வேண்டினல் - அதனையும்கூட நடுவுநிலைமையோடு ஆராய்ந்து மேற்கொள்வார். கூற்றும் அஞ்சி ஓடும்வண்ணம் போர்முனையில் பகைவரை அடுவார். ஆதலால்இவர் முனை அடுவார் எனப் பெயர் வழங்கப்பெற்றுர். (முனை-போர்முனை; அடுதல் - போர் புரித்தல்.)

இங்ஙனம் பெற்ற செல்வத்தை யாது செய்தார் என்ற வினவிற்கு,

"இன்ன வகையால் பெற்றநிதி
எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரப்பக்
கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர் பால்
கனியுள் ஞறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா
வழித்தொண்டு ஆற்றி வைகினர்"

எனச் சேக்கிழார் விடை பகர்கிறர்.

குருமணிகள் இவர் வரலாற்றின் பிழிவாக மூன்றுசெய்திகளைத் தொகுத்தளித்தார்கள்.

1. சொன்ன சொன்னபடி கொடுத்தல்.
2. அமுது செய்வித்தல்.
3. வழித் தொண்டு ஆற்றல்.

என அடியாரிக்கு முனையடுவார் ஆற்றிய திருத்தொண்டுகள்பற்றிக் குறித்தருளி மனம் கொள்வித்தார்கள். அடியார் பணிசெய்த முனையடுவார் சிவலோகம் அமர்ந்து இன்புற்றார் என நிறைவு செய்தார்கள். முனையடுவார் செய்கை வழக்குரைஞர் செயலோடு ஒப்பிட்டு நியாயமான முறையில் போர் உடற்றிப் பெரும் பொருள் பெற்ருர் என விளக்கினர்கள். எறிபத்தர்போல நியாயத்துக்கே நடுவு நிலையில் நின்று துணையானர் என்பதைக் குறித்துக் காட்டி முனையடுவார் தவருன வழியில் பொருள் ஈட்டவில்லை என நிருவி யமை புராணத்தை விளங்கிக் கொள்ளத் துணையாக அமைந்தது.

இங்ஙனம் திருமுறைகள், உலகியல் எடுத்துக்காட்டுகளுடன் தக்க மேற்கோள்கள் காட்டி அருளுபதேசம் நிறைவித்தார்கள். மணி மாலை 9 ஆயிற்று. பருகப்பானமும் கிடைத்தது. உண்போர்க்கு உணவும்கிடைத்தது. இனிய சிந்தனைகளைத் தாங்கித் திருக்கோயில் வழிபாடு ஆற்றி இல்லம் ஏகினேம்.

திருநெறியில் தவருது திருத்தொண்டர் புகழ்சாற்றும்
அருமைமிகு குருமணியின் அடிமலர்கள் துதிசெய்வாம்!

வாழ்க குருமணிகள்!

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

வைத்தீசுவரன்கோயில்

ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு நாங்கள் செய்துகொண்ட பிரார்த்தனை அவனருளால் இன்று செய்ய வாய்ப்புகிடைத்தது. இறைவன் வழிபாடு மன நிறைவுதந்தது. கோயில் நிர்வாகமும், பூசை முறைகளும் சிறப்புற இருப்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் அருள் எல்லோருக்கும் கிடைக்க விழைகின்றேன்.

(ஒ-ம்) க. மார்கபந்து,
மானேஜிங் டைரக்டர்,
ஸ்டேட் பாங் ஆப் சவுராஷ்டிரா
10—2—90. பவநகர், குஜராத்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆயில்ய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சுக்கில தை ஆயில்ய வழிபாடு 13—1—90 சனிக்கிழமையன்று அருள்மிகு சொர்ணபுரீசுரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நிகழ்ந்தது. இத்தலம் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம் பெற்றது. இத்தலத்தின் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் உரை நிகழ்த்தினர். தேவாரப் பாடல்களும் தலச்சிறப்புக்களும் என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 103 ஆவது அருளுபதேசம் 4—2—90 அன்று காலை 10 மணி அளவில் தொடங்கித் திருமுறைப்பாராயணம் முதலிய அங்கங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., தொல்காப்பியச் சிறப்புப் பாயிர விளக்கம் தந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணச் சிந்தனை அருளுப்வகையில் கழற்சிங்கநாயனார், இடங்கழிநாயனார், செருத்துணைநாயனார் புராணங்களின் வாயிலாகத் தத்துவ நெறி புலட்டினார்கள். இம்மூவரும் அரச குலத்தினர். கழற்சிங்கர் பல்லவர்; இவர் சுந்தரர்காலத்தில் அரசோச்சியவர்; இடங்கழியார் ஆதித்தசோழன் வழிவந்தவர்; கோனாட்டுக் கொடும்பாளூரினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்; தஞ்சை மன்னவராகம் செருத்துணையார் மருகல்நாட்டுக் கீழைத் தஞ்சைப் பகுதியை ஆண்ட சிற்றரசர் – இங்ஙனம் குறிப்புக்களை அருளியும் இவர்கள் தம் தொண்டு நெறிபற்றிச் சிறப்பித்து ஓதியும் அருளுபதேசம் செய்தார்கள்.

ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலியோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 4—3—90 அன்று 104 ஆவது அருளுபதேசம் நடைபெறும் அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவராக.

ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை

தருமை ஆதீனம் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை விழா மார்கழி 29 ஆம் நாள் 13—1—90 சனிக்கிழமை கிருஷ்ணபட்ச திருதியை திதியன்று குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றினார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும் பக்தர்களும் கலந்துகொண்டு வழிபட்டுக் குருவருட் பிரசாதம் பெற்றுய்த்தனர்.

காலை வழிபாட்டின் பின் சங்கற்ப நிராகரணம் என்னும் நூலில் உள்ள தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. டாக்டர் திரு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி., புறச்சமய - மாயாவாத - ஐக்கியவாத மறுப்புப் பற்றியும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அகச்சமய பாடாணவாத மறுப்புப் பற்றியும், வித்துவான் திருமதி ப. நீலா, எம். ஏ. எம். ஃபில்., அகச்சமய பேதவாத மறுப்புப் பற்றியும், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., அகச்சமயசிவசமவாத மறுப்புப்பற்றியும், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச். டி. அகச்சமய ஈசுவர சங்கிராந்தவாத மறுப்புப்பற்றியும், பேராசிரியர், திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., அகச்சமய ஈசுவர அவிகாரவாதமறுப்புப் பற்றியும், வித்துவான் திரு.ஏ.மா. கண்ணப்பன், எம்.ஏ., பி.எட்., அகச்சமய நிமித்தகாரண பரிணாமவாத மறுப்புப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

நண்பகல் 1 மணிக்கு மாகேசுவர பூஜை நிகழ்ந்தது. மாலை 6 அளவில் திருமுறை இசையரங்கு நிகழ்ச்சியும் இரவு 8 மணிக்குக் குருமூர்த்த வழிபாடும் நடைபெற்றன.

தைச்செவ்வாய்த் திருவிழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீசெல்வமுத்துக்குமார சுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 28—1—90 முதல் 6—2—90 முடிய மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் காலை மாலை விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. 5—2—90 திங்கள் அன்று திருத்தேர் விழாவும்

6—2—90 செவ்வாய் அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச் செவ்வாய் தீர்த்தமும் நடைபெற்றன. தருமை ஆதீனக் கலைக் கல்லூரி பேராசிரியர்களும் புலவர்களும் முருகப்பெருமான் எழுந்தருளிய திருத்தலங்கள் பற்றி நாள் தோறும் மாலை 6 மணி அளவில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் முருகப்பெருமானைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

திருமுறை வேள்வி தொடக்க விழா

சிவபெருமானுக்கு மிக உகந்ததும் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்ததும் பன்னிருதிருமுறைகளில் முதல் தேவாரத் திருப்பாடலாகிய "தோடுடைய செவியன்" தோன்றியதும் திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றம் செய்தருளியதும் ஆகிய திருவாதிரைத் திருநாளில் முதல் திருமுறை முற்றோதல் 7—2—90 புதன்கிழமை காலை 7-00 மணி முதல் மாலை 7-00 மணி வரை தேவாரம் தோன்றிய தலமாகிய சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ திருநிலைநாயகியுடனாகிய ஸ்ரீ பிரமபுரீசுவரர் சந்நிதியில் நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றித் தொடங்கி வைத்தார்கள். திருமுறை ஓதுவார்களும், புலவர்களும் திருமுறைஓதினர். சீகாழிநகரப் பெருமக்களும் தாய்மார்களும் செவிமடுத்துக் கேட்டுய்ந்தனர். மாலை 7-00 மணி அளவில் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி ஆசியுரை வழங்கி முதல் திருமுறை முற்றோதலை நிறைவு செய்தருளினார்கள். இரண்டாம் திருமுறை முற்றோதல் 6—3—90 செவ்வாய்க்கிழமை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் அன்பர்கள் செவிமடுத்து இம்மை மறுமை நலன் எய்துவார்களாக.

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

இன்று எங்களுடைய சஷ்டியப்த பூர்த்தி திருமணத்தை பெரு விமரிசையாகச் செய்வித்து எங்களை மகிழ்வித்த தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் மற்றும் இதில் பங்கு கொண்ட எல்லோருக்கும் எங்களது நன்றி.

(S-d) V. Ramaswami,
(Justice V. Ramaswami)

14—7—89 Chife Justice Punjab & Haryana, High Court.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹு மாசிமீ 1௳ முதல் 29௳ முடிய)
(13—2—1990 முதல் 13—3—1990 முடிய)

சுக்கிலஹு தைமீ 30௳ சோமவாரம் உத்திர நக்ஷத்திரம் கன்னியா ராசி பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயாதி 38 நாழிகை 57 விநாடிக்குக் கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் மகரராசியினின்றும் கும்பராசி சங்கிரமணமாக மாசிமாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். மறுநாள் மங்களவாரம், மாசி மாதம் முதல் தேதியாகிறது. சங்கிரமணகாலகிரகஸ்திதியின்பலனால் லோகத்தில் சகலமான பிரஜைகளுக்கும் உய்வு உண்டாகும். லோக நாடுகளில் சுரங்கத்தீ, எரிமலைச்சீற்றம், நிலச்சரிவு முதலானவற்றில் பொருள் சேதம், மக்கள் துயரம் இவைநீங்க இறையருளில் ஆன்றோர்களால் நிவாரணங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். மன்னர்கள் ஜனாதிபதிகள் ஆட்சியாளர்கள் பிரஜைகளை சம்ரக்ஷித்துவருவர். தேசபரிபாலனம் செவ்வையுற்றுத் திகழும். செங்கோல் உயரும். தொழில் வளம் பெருகும். பொருளாதாரம் மிகும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரியசுவாமிகளாக வந்து திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் லோகத்துக்கு சைவ சித்தாந்த ஞான போதனை செய்வித்து மாந்தர் அனைவரும் மெய்ஞ்ஞானம்பெற அருளிச்செய்வார்கள். லோக நாடுகளில் ஆங்காங்கு கிளை மடங்கள் நிறுவ சைவ சித்தாந்த நல்விஷயம் பரவக் குழுக்கள் ஏற்படுத்தியருள்வார்கள். தம் வழி வந்த தம்பிரான்கள் சிஷ்யகோடிகளுக்கு ஞானதீக்ஷைசெய்து ஆசியருள்வார்கள். அன்னார் திருநோக்கில் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், மஹாசிவராத்திரி விசேஷ பூசைகள் சிறப்புற நடைபெற்று லோகத்தில் சுபிட்சம் மேவிடும். மக்கள் அனைவரும் சிவபெருமானைத் தேவாலயங்களில் அலங்காரத் திருவுருவில் தரிசித்து மகிழ்ந்து மனோலயப்பட்டு நெறியாகச் செயல்புரிந்து நல்வாழ்க்கை நடத்திவருவர்.

சிவராத்திரி விரதம்

குறிப்பு:- சுக்கிலஹு மாசிமீ 11உ சுக்கிரவாரம் (23—2—90) கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியன்று அனைவரும் சிவராத்திரிவிரதம் அனுஷ்டிக்க வேண்டியது. விரதங்கள் நித்திய விரதம் எனவும் நைமித்திக விரதம் எனவும் இரண்டு வகைகளாம்.

விரதங்களின் விவரம் :- மேற்கண்ட விரதங்களில் நித்திய விரதமாவது அடுத்தடுத்து வருகிற கிரம தெய்வத்துக்குரிய கிழமைகளில் அனுஷ்டிக்கும் வாரவிரதம், பக்ஷ விரதம், மாசவிரதம் ஆகியனவாகும். பக்ஷ விரதமாவது பிரதோஷ விரதம், சஷ்டியாதி ஏகாதசி விரதங்களை, மாச விரதமாவது கார்த்திகை சிரவணம் முதலான நக்ஷத்திரங்களில் அனுஷ்டிப்பதும் முப்பது தினமும் பகல் ஒருவேளை உண்டு இரவு விரதமாகவும் மற்றொன்று முப்பது தினமும் இரவு ஒருவேளை உண்டு பகலில்விரதமும் இருந்து மாதாந்தரத்தில் ஒரு நாள் பூராவும் விரதம் அனுஷ்டிப்பதும் ஆகும்.

நைமித்திக விரதமென்பவை வருஷத்தில் ஒரு முறை அல்லது முன் கருதல் இல்லாமல் வருவது முதலானவை. அத்தகைய விரதங்களில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பதால் திரிகரணசுத்தி ஏற்படும் முக்திபெற இறையருள் உண்டாகும், ஆகவே எல்லோரும் குருமார்கள் சிவாசாரியார்கள் வழியில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டியது அவசியமாகும்.

சிவராத்திரி விரத தாத்பரியம் :- சிவராத்திரி விரதத்தின் தாத்பரியமாவது முன் ஒரு கற்பகால முடிவில் பிரம தேவர் தம் தொழிலிலிருந்து நீங்கி உலகம் முழுதும் பிரளயம் மூடிய நாளில் அந்த ராத்திரியாகிய பிரளய அவசரத்தில் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு உமா தேவியார் நாலுயாமமும் சிவபூசை செய்து விடியலில் சிவபெருமானிடம் தாம் வழிபட்ட சிவராத்திரி பூசை கிரமமாய் அனுஷ்டிப்போர் முத்தியடைதல் வேண்டும் என வேண்டினார். சிவபெருமான் அப்படிக்கு அருளினார். அதனால் சிவராத்திரி விரதம், பூசை சிவதரிசனம், விசேஷமானதாகும்.

1 மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் கணிசமாக வந்து நிறையும். செந்நெல் பிராப்தி, சிவந்தவஸ்துவின் பிராப்தியளிக்கும் தெய்வபக்தி ஆசார அனுஷ்டானம் பேணுதல் ஆகும். நல்லோர் சந்திப்பு, குருமார்கள் தரிசனம், மன அமைதியளிக்கும் - பிப்ரவரி 22 தேதியில் கலை ஞானத்தில் தெளிவும் அரசுவிகிதம் வந்து மகிழ்ச்சி சம்பவமும் ஆகும். மார்ச்சு 2 தேதியில் ஈஸ்வர செயலில் முன் முயற்சித்திருந்தவற்றில் ஜெயம் தரும். கிரியைகளைக் கெடியாக நடத்தும். பிப்ரவரி 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம், வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பணவருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்பவந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ நற்பலனை உண்டு பண்ணும். பிப்ரவரி 22 தேதி ஆனல் அரசுவிகிதம் வருதல், செய்தொழில் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படுதல் ஆகும். புத்திரருக்கு அரசாங்கத்தில் பாராட்டு ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். பிப்ரவரி 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்புத் தரும். ஞானமார்க்க சிந்தனை, சாஸ்திரம் அனுஷ்டித்தல் ஆகும். அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். மார்ச்சு மாதம் ஓர்புதிய அலுவலை ஏற்கும், கம்பியூட்டர் அல்லது இயந்திர சாதனை பிராப்தியளிக்கும். எல்லாக் காரியங்களிலும் இருந்த தடைகள் நீங்கும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சௌக்கிய பலன் தரும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு நீங்கிச் சுமுகம் ஏற்படும். பிப்ரவரி 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4 கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவருமானம் வந்து கொண்டிருக்கும். தக்கசெலவினமும் முதலீடுகளும் செய்விக்கும். பிப்ரவரி 22தேதியில் சிறப்புக்குரிய தலைவர்கள் வரச்செய்யும் பதவியில் உயர்வளிக்கும். பொதுக்காரியங்களுக்குத் தலைமைப்பொறுப்பு ஏற்படும். எல்லா முன்னேற்பாட்டுச்செயல்களிலும் வெற்றியை ஏற்படுத்தி வரும். தாம்பத்திய வாழ்வில் நெறி பிறழ்தலின்றி பக்தியில் தானதர்மத்துடன் இல்லறம் செய்யும். ஓர் தெய்வஸ்தலம் சென்று வருதல் ஆகும். பிப்ரவரி 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவருமானம் வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்தம் ஆகும். செய்தொழில் உத்தியோகத்தில் பிரயோஜன சித்தியும் முன்பு வரவேண்டியவை வரவு ஆவதும் ஆகும். மார்ச்சு 2 தேதி ஆனல் பூமி வீடு பூர்வ பொருள் பிராப்தியில் நல்ல நிலைமையை ஏற்படுத்தி தரும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சௌக்கியபலனை உண்டுபண்ணும். தாம்பத்திய வாழ்க்கையில் நல்ல சௌகரியம் இருந்துவரும். எல்லாக்காரியங்களையும் வெற்றியாக

நடத்தும். பிப்ரவரி 27 28 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாகவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய் தொழில் உத்தியோகத்தில் பிப்ரவரி 22 தேதியின்மேல் சிறப்புப் பலனை உண்டுபண்ணும். அரசுலிகிதம் வரும். ஒப்பந்த வேலைநேனி களில் நல்லன ஏற்படும், எல்லாக் காரியங்களும் பெருமதிப்பில் நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 2தேதியின் பிறகு மனமாறுதலில் இருந்த ஒருவர் வலுவில் ஒன்று கூடுவர். தாரம் புத்திரார்களின் நலம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 1,2 தேதிகள் சந்திரஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் நல்லவகையில் வரவாகிக் கொண்டிருக்கும். செந்நெல் பிராப்தி மிதம். நல்ல வாகனம் இயந்திர சாதனபிராப்தியளிக்கும். மார்ச்சு 2 தேதியின் பிறகு அன்புக்குரியவர், ஒருவர் தூரச்சென்று விடுவர். புத்திரரின் கல்வி கலைகளில் உயர ஸ்திதியாகும். எல்லாக் காரியங்களையும் திடசித்தத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் இல்லற தர்மம் வழுவாது நடந்து வரும். மார்ச்சு 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வரும். நெறிமுறை வற்புறுத்தலில் சிஷ்யர்கள் பணியாளர்கள் மனக்கசப்புறினும் பின் போற்றுவர். பிப்ரவரி 22 தேதியில் அரசாங்கத்திலிருந்து நன்மைக்குரிய ஆணை வரும். மார்ச்சு 2 தேதியில் எல்லாக் காரியங்களையும் வெற்றிகரமாக முடித்தல் ஆகும். மறைமுக சத்துருவின் தொல்லை நலியும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் மூன்று வகையில் வரச்செய்யும். நல்ல இரத்தின பூஷணம் தரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்து வரும். புத்திரர்

புத்திரிகளுக்குக் கல்வி கலை ஜீவனோபாயங்களில் மேன்மை ஸ்திதியளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மத்துடன் இனிது நடந்து வரும். மார்ச்சு 10 தேதியில் செயல்பாடுகளில் உயர் ஸ்திதி ஏற்படுத்தும். மார்ச்சு 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வரும். அவசிய செலவினமும் இருந்து வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிப்ரவரி 22 தேதியில் நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தும். நெருக்கடியாக இருந்த எல்லாப் பிரச்சினைகளிலும் நல்ல தீர்வை உண்டு பண்ணும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படுத்தும். அலுவலகக் காரியங்கள் திருப்திகரமாக முடிந்து மேலிடத்திய பேற்றுதல்களை ஏற்படுத்தும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மார்ச்சு 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் நற்பலனளிக்கும். பண வருமானம் செந்நல பிரவாகம் மிகுந்து வரும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலன் தரும். ஸ்திரி வழியினரிலும் புத்திரரின் முனைனேற்ற வகையிலும் நல்லவகைச் செலவினை ஏற்றுச் சிறப்புறச் செய்யும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் இனிது நடந்து வரும். தெய்வ புண்ணிய க்ஷேத்திரங்கள் சென்று வருதல் ஆகும். பிப்ரவரி 13, 14 மார்ச்சு 12, 13 இத் தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவ கலைத்துறையில் புகழ்பரவும். பிப்ரவரி 22 தேதியில் அரசு கணயம், விளம்பரம் இவற்றிலபெருகுட் செலவுடன் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். மார்ச்சு 3 தேதியில் பூஸ்திதக்கு நல்ல ஏற்பாடு துவங்கும். எல்லா அரிய பெரிய காரியங்களும் பெருமதிப்பில நடந்தேறும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு நற்சம்பவங்கள் நடந்து மனமகிழ்வாகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். பிப்ரவரி 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

உ

சிவமயம்

மாசிமாதச் சிறப்பு நாட்கள்

13—2—90 செவ்வாய், சங்கடஹர சதுர்த்தி.

16—2—90 வெள்ளி, திஸ்ரேஷ்டகா.

17—2—90 சனி, காளாஷ்டமி.

21—2—90 புதன், காரி நாயனார் குருபூஜை.

22—2—90 வியாழன், பிரதோஷம். வியசிரா.

23—2—90 வெள்ளி, மகாசிவராத்திரி, சிரவண விரதம்.

24—2—90 சனி, போதாயன அமாவாசை.

25—2—90 ஞாயிறு, சர்வ அமாவாசை. கோச்செங்கட்சோழ நாயனார் குருபூஜை. துவாபர யுகாதி.

28—2—90 புதன், சதுர்த்தி விரதம்.

1—3—90 வியாழன், மாசிமக உற்சவ ஆரம்பம்.

2—3—90 வெள்ளி, சஷ்டி விரதம். வைசிரா.

3—3—90 சனி, கிருத்திகை விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். மூன்று தினங்கள் சூரியபூஜை.

8—3—90 வியாழன், பிரதோஷம்.

9—3—90 வெள்ளி, ஆயில்யவிழா.

10—3—90 சனி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். மாசிமக உற்சவ தீர்த்தம், திருக்கடவூர், திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டானேசுவரருக்கு அபிஷேகம். திருக்குறுக்கை ஸ்ரீ தோத்ரபூரணாம்பிகை சமேத ஸ்ரீ காமதகன மூர்த்தியுடன் ஸ்ரீ பஞ்சமூர்த்திகளும் புறப்பாடு; திருக்குவளை நெல் மகோற்சவம்.

11—3—90 ஞாயிறு, பௌர்ணமி விரதபூஜையில் கிருத கம்பளம் சாத்துதல். ப்ரும்மஸாமனு.

13—3—90 செவ்வாய், வேளூர் ஸ்ரீ சந்திரசேகரர் உற்சவ ஆரம்பம். எறிபத்த நாயனார் குருபூஜை.

அருந்தவ யோகம்

இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்திய லிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயவழித் தங்கண்
அருந்தவ யோகம் குறுக்கை யமர்ந்ததே.

— திருமூலர்.

GNANASAMBANDAM
Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ

சிவமயம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில்

வைத்தீசுவரன்கோயில்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

திருமுறை வேள்வி

(இரண்டாம் திருமுறை முற்றோதல்)

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி துணைக்கொண்டு 7—2—1990 புதன்கிழமை சீகாழியில் தொடங்கி ஒவ்வொரு மாதமும் திருவாதிரைத் திருநாளில் பன்னிரு திருமுறைகளைத் தலத்துக்கு ஒரு திருமுறையாக முற்றோதல் செய்யும் திருமுறைவேள்வி,

6—3—90 செவ்வாய்க்கிழமை

காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை

வைத்தீசுவரன்கோயில்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி சந்நிதியில் நிகழவுள்ளது.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காலையில் திருமுறை வேள்வியைத் தொடங்கி வைத்தும், மாலையில்
நிறைவு செய்தும் அருளாசி வழங்கியருள்வார்கள்.

திருமுறை இசைவாணர்கள் புலவர்கள்
திருமுறை விண்ணப்பம் செய்வர்.

அன்பர்கள் வந்து கேட்டுப் பயனெய்துவார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-2-90